Registered as a Newspaper in Ceylon ★ ★ ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 18 9-11-66 இதழ் 870
பராபவ றஜப் 25 ஐப்பசி 24 புதன்கிழமை

## புயல் அபாயம்பற்றி எச்சரிக்கை
### இன்று காலநிலை மோசமாகலாம்

மாவிட்டபுரம், செவ்.

இன்றிரவிலிருந்து நாளை முழுநாளும் யாழ்ப்பாணம் மட்டக்களப்பின் கரையோரப்பகுதிகள், திருகோணமலை, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் பலத்த காற்று வீசும்என அவதான நிலையத்திலிருந்து கிடைத்துள்ள செய்தியொன்று கூறுகின்றது.

இந்தப்பிரதேசங்களில் சாதாரணமழையும் பலத்த காற்றும் இருக்கும் என்றும் கடலில் வெகுவாகக் கொந்தளிப்பு இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைக்கு கிழக்குப்பகுதியில் சுமார் 200 மைல் தொலைவில் புயல் காற்று அமுக்கம் உருவாகியுள்ளதாகவும் அது இலங்கையின் வடக்குப்பிரதேசம் நோக்கி செல்வதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று வட பிரதேசத்தில் மழையுடன் கூடிய காற்று வீசலாம்என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கடலில் மீன்பிடிக்க செல்லும் மீனவர்களும், கரையோரப் பகுதியில் வாழும் மக்களும் எச்சரிக்கையாகவிருப்பது அவசியம்.

# 'துவேஷம் முகங்களில் எழுதி இருக்கின்றது'

## எதிர்க்கட்சியினருக்கு ராசமாணிக்கம் சாட்டை

கொழும்பு, செவ்வாய்

இனத்துவேஷம் எதிர்க்கட்சியினரின் முகங்களிலேயே எழுதிக்கிடக்கின்றது என்று பட்டிருப்பு எம். பீ. திரு. இராசமாணிக்கம் பிரதிநிதிகள் சபையில் இன்று கூறினார்

எதிர்க்கட்சியினர் இன்னும் இனத்துவேஷத்தைக் கிளப்புவதை நிறுத்தவில்லை. அவர்கள் முகங்களிலேயே இனத்துவேஷம் எழுதிக்கிடக்கின்றது. அண்மையில் நடைபெற்ற தேர்தல்களின்போது வகுப்புத்துவேஷத்தை தென்னிலங்கை மக்கள் முற்றாக நிராகரித்துவிட்டார்கள். ஆனால் இன்னும் எதிர்க்கட்சியினர் துவேஷத்தைக் கிளப்பிக

(8-ம் பக்கம் பார்க்க)

## மந்திரி தஹநாயக்கா நாளை யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், புதன்

உள்நாட்டு அமைச்சர் டபிள்யூ. தகநாயக்கா, நாளை காலை விமானத்தில் பலாலி விமான நிலயத்தை வந்தடையும்போது, பெரும் வரவேற்பு அளிக்கப்படும்.

வட பகுதி எம். பிக்கள், யாழ்ப்பாண அரசாங்க அதிபர். யாழ். மாவட்ட காரியாதிகாரிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள் அவரை விமான நிலயத்தில் வரவேற்பர். அவர் இங்கு பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார்.

நாளை காலை 8-45 மணி முதல் 9-15 மணிவரை, திருநெல்வேலியிலுள்ள ஆர். வி ஜி. பீடிக்கம்பெனிக்கு மந்திரி விஜயம் செய்வார். காலை 11-30 மணி முதல் 11-45 மணிவரை உள்நாட்டு புகையிலை உற்பத்தியாளரைச் சந்திப்பார். 11-ம் திகதி தேவரையாளி இந்துக் கல்லூரி புதிய கட்டடத்தை மந்திரி திறந்து வைப்பார்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இரு தினங்களும் மந்திரி வடபகுதியில் பல நெசவு நிலயங்களைத் திறந்து வைப்பார். 11-ம் திகதி பிற்பகல் சாவகச்சேரியில் மந்திரிக்கு பொதுவரவேற்பு அளிக்கப்படும்.

## உபசபாநாயகர் மீது அவநம்பிக்கைப் பிரேரணை
### இன்று விவாதிக்கப்படும்

கொழும்பு, செவ்

உப சபாநாயகர்மீது நம்பிக்கையின்மை தெரிவித்து எதிர்க்கட்சியினர் கொண்டு வருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்திருந்த பிரேரணை நாளை புதன்கிழமை ஜனப்பிரதிநிதிகள்சபை மீண்டும் கூடும்போது முதலிடம் கொடுத்து விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுமென எதிர்க்கட்சியினருக்குச் சபாநாயகர் உறுதியளித்திருக்கிறார்.

தொடம்பே முதலாளி எனப்படும் திரு. எல். வி. பொடி அப்புஹாமியின் மரணம் பற்றி நடைபெற்ற விசாரணையின்பின் 'கொலை' யெனத் தீர்ப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதுசம்பந்தமாகக் கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சியினர் கோரியபோது தொடம்பே முதலாளி விவகாரம் நீதிமன்ற விசார

(8-ம் பக்கம் பார்க்க)

## மந்திரிசபை இன்றிரவு கூடுகிறது
### இரியகொலைக்கு எதிர்ப்பு வலுக்கிறது

கொழும்பு, செவ்.

கல்வி அமைச்சர் பதவியிலிருந்து திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையை நீக்க வேண்டுமென உருவாகியுள்ள இயக்கம் இப்போது வலுப்பெற்று வருகிறது. திரு. இரியகொல்லையையும் வர்த்தக அமைச்சர் பதவியிலிருந்து டாக்டர் எம். வி. பி. பீரிஸையும் நீக்கவேண்டுமென ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்களிடம் கையெழுத்துச் சேர்க்கும் வேலையும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கல்வி அமைச்சராக இருக்கும் திரு. இரியகொல்லை தங்களுக்குத் திருப்தியாக நடந்து கொள்ளவில்லை என தமிழரசுக் கட்சியினரும் கருத்துத் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

புதன் கிழமை இரவு 9 மணிக்கு மந்திரி சபைக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் மந்திரிசபை மாறுதல் பற்றி இறுதி முடிவு செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 10-ம் திகதி வேலை நிறுத்தம் செய்யும் கிளைகள் கூடுகின்றன
### வர்த்தக ஊழியர் பிரச்னை விரைவில் தீரும் அறிகுறி

கொழும்பு, செவ்வாய்

வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ள தனது கிளைகளின் கூட்டமொன்றை 10ந்தேதி நடத்த இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் முடிவுசெய்துள்ளது.

இதனால் இப்போது வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ள 15,000 ஊழியர்களும் 10ந்தேதிவரை வேலைக்குத் திரும்பும் சாத்தியமில்லை என்று கருதப்பட்டாலும், 10ந் தேதி வேலைநிறுத்தம் முடிவுக்கு வருமென்ற நம்பிக்கை இருந்துவருகிறது.

இதற்கிடையில் தொழில் மந்திரிக்கும், வர்த்தக ஊழியர்களுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது பல பிரச்னைகளில் இணக்கமேற்பட்டி

(8-ம் பக்கம் பார்க்க)

### யாழ். மாநகரசபை கலைப்பு அப்பீல் மனு
## பிரிவுகவுன்சில் ஏற்றது
### விசாரணை அடுத்தமாதம்

லண்டன், நவ. 8

யாழ்ப்பாணம் மாநகரசபை கலைக்கப்பட்டதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட பிரிவிகவுன்சில் அப்பீல் வழக்கு சம்பந்தமான விசாரணைகள் அடுத்த மாதம் நடைபெறும்.

யாழ்ப்பாணம் மாநகரசபையை ஸ்தலஸ்தாபன மந்திரி செனட்டர் எம். திருச்செல்வம் கலைத்ததை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு இலங்கையில் தள்ளுபடி செய்யப்பட்டதைத் தொடர்ந்து பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாண மாநகரசபை கலைப்பு வழக்கை பிரிவி கவுன்ஸிலில் விசாரணை செய்வதற்குப் பொதுஜன பக்ஷத்துவத்தை முன்னிட்டும் சில அவசர காரணங்களைத் தொடர்ந்தும் கென்ட்பிரபு, பியர்ஸன் பிரபு, அப்ஜோன்பிரபு

(8-ம் பக்கம் பார்க்க)

தீபாவளிப் பண்டிகைக்கு
புத்தாடை புனைவதற்கு
இன்னும் இருதினங்கள் மட்டுமே!
பெரியோர் முதல் சிறியோர்கள் வரைக்கும்
தேவையான
உயர்தர ஜவுளிகளைப் பெற
உடனே விரையுங்கள்
"ராஜ்கோபால்ஸ்"
பிடவை ஸ்தாபனத்திற்கு
36/1, பெரியகடை, :-: யாழ்ப்பாணம்.
போன்: 7168.

தீபாவளி பண்டிகைக்கு
புத்தாடைகள் வாங்குவதற்கு
இரு தினங்கள் மட்டுமே உண்டு
உங்கள் தேவைகளுக்கு
விக்னேஸ்வரா
புடவை மாளிகைக்கு
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
விஜயம் செய்யுங்கள்
C. W. E. மூலம்
இறக்குமதி செய்யப்பட்ட புடவைகள், சீத்தைகள்,
901 மல்வேட்டி, மற்றும் எல்லாவித புடவைவகைகளும்
மலிவான விலையில் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

கணக்காளர்:
கணக்கு எழுதும் திறமையும், டைப்பிங் செய்யும் அனுபவமுமுள்ள முழுநேர வேலை செய்யக்கூடிய ஒருவர் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1480

பூசகர்:
கலேவெல ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலுக்கு தற்போது பூசை நடாத்துபவருக்கு உதவிக்காக உதவி பூசகர் ஒருவர் தேவைப்படுகின்றது. அவர் பிராமண குலத்தவரும், 15 — 20 வயதுக்குட்பட்டவரும் விரும்பத்தக்கவர். குணநடை நன்றாக அமைந்திருக்கவேண்டும். உணவு வசதியுடன் மாதம் 30/- ரூபா சம்பளம் கொடுக்கப்படும். விரும்புவோர் 15-11-66க்கு முன் கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரில் அல்லது கடித மூலம் விண்ணப்பிக்கவும். கு. கோபாலசர்மா, ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில், டம்புல்ல ரோட், கலேவெல. (P.o.) 1488

வான் சேல்ஸ்மென்
யாழ்ப்பாணம், நாட்டுப்புறங்களில் சரக்குகளை விற்பனைசெய்ய வான் சேல்ஸ்மென்கள் தேவை. ரொக்கப்பிணை ரூபா 3000/-கட்டவேண்டும். சம்பளம் ரூபா 150/- ம், அலவன்சும் கொடுக்கப்படும். விளம்பர இல:1485, ஈழநாடு மே/ளா என எழுதி மூலம் விண்ணப்பிக்கவும். 1485

## தேவை

ஸ்ரீ வரதாஸ் பிடவை மாளிகைக்கு பேபிசூட், கவுண் பூவேலைகள் பின்னல் டிசைன்கள் செய்யக்கூடிய திறமைவாய்ந்த பெண்மணிகள் தேவை. வேலைத் திறனுக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்துக்கு நேரில் விஜயஞ்செய்யவும். ஸ்ரீ வரதாஸ் பிடவை மாளிகை, 87/2 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1159

## வைத்தியம்

அற்புத பூரண சிகிச்சை. மாதங்களில் ஒரு தரம் குழம்பைப் பூசினதும் பற்குத்தை, பல்வலி, பற்புழு, முரசு, கன்னம், நாக்கு, வீக்கம் முதலியன சற்று நேரத்தில் சுகமாகிவிடுகின்றன. ஒமேகா — கொடிகாமம். 1484

## நம்பிக்கையில்லாத் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்
காரைநகர்க்கிராமசபைத் தலைவர் திரு. க. சிவலிங்கத்திற்கு எதிராக மேற்படி சபை உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத்தீர்மானம் மீண்டும் ஒத்திவைக்கப் பட்டது. தீர்மானத்தை நிறைவேற்றப்போதுமான அங்கத்தவர்கள் சபைக்கூட்டத்திற்கு வராததால் ஒத்திவைக்கப் பட்டது. முன்பும் இருதடவைகள் இத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு பின் போடப்பட்டது.

**யாதவா**
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
நடித்த
**எங்கவீட்டுப்பிள்ளை**

**மகாத்மா தியேட்டர்**
(தெல்லிப்பழை)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி—சாவித்திரி
நடித்த
**திருவிளையாடல்**
பிரதமரின் யாழ்ப்பாண
விஜயமும் காண்பிக்கப்படும

# "உழைப்புக்கேற்ப ஊதியம் தேவை"

## தொழிலாளர் கூட்டத்தில் அஸீஸ்

கொல்லாந்தை, செவ்
"தொழிலாளர்களும் முதலாளிகளும் ஒன்று சேர்ந்து ஒரே திசையில் செயலாற்றினால் தொழிற்சங்கங்கள் தேவையே இல்லை. தொழிலாளர்களும், முதலாளிகளும் வெவ்வேறு திசையில் போவதால் தான் இருசாராருக்கும் நல்லுறவு இல்லாமல் சிக்கல்கள் தோன்றுகின்றன. போராட்டமில்லாமல் தொழிலாளருக்கு நன்மை கிடைத்ததாக சரித்திரம் இல்லை".
நாவலப்பிட்டியில் நடைபெற்ற தொழிலாளர் கூட்டமொன்றில் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.
பெருந்தொகையான தோட்டத்தொழிலாளர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் ஜனாப் அஸீஸ் மேலும்பேசுகையில் "தொழிலாளர்களின்கடினஉழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படவேண்டும். அப்போது தான் தொழிலாளர் விசுவாசமாகதங்கள்கடமையை செய்வர். இதைவிட்டு கொள்ளைலாபம் அடிப்பதே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு தொழிலாளரின் வருவாயில் கைவைக்கப் பார்த்தால் தொழிலாளர் சக்தி வாளாவிருக்காது" என எச்சரித்தார்.
பலதோட்டப் பிரதிநிதிகளும், மாதர் சங்க தலைவிகளும் உரையாற்றிய இக் கூட்டத்திற்கு நாவலப் பிட்டி மாவட்டப் பிரதிநிதி தலைமைவகித்தார்.




## கொழும்பு
புதன் 9 - 11 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வளை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

844 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 தெம்மாங்கு இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 பட்டிதிவிருந்து.
இரவு 6-10 விவசாயச் செய்திகள், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 விவாத மேடை — மின்காபி செய்கை, 7-15 பாட்டு — ஏ. சுந்தரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழலும் கிளாரினெட்டும், 9 30 பாட்டு — கே. சிவபிள்ளை, 10-00 நேயர்விருப்பம்.

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி-சாவித்திரி
நடித்த
**பாவ மன்னிப்பு**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
ரஞ்சன் — வசுந்தராதேவி
நடித்த
**மங்கம்மா சபதம்**
(புதிய கொப்பி)

**REGAL—JAFFNA**
NOW SHOWING
Elizabeth Taylor
Richard Burton
in
SANDPIPER
(Adults)

## அப்பீலில் விடுதலை

மாவிட்டபுரம், செவ்.
திருட்டுக் குற்றத்திற்காக மல்லாகம் நீதிபதியினால் இரண்டுவருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டஒருவர் தண்டனையை எதிர்த்து செய்த அப்பீலில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.
இவ்வழக்கில் கொக்குவிலைச்சேர்ந்த அகிரனி பேகினானவர் உடுவிலைச்சேர்ந்த வழக்கறிஞரான பி. இராசரத்தினம்வீட்டில் 1200ரூபா பெறுமதியான நகைகளைத் திருடியதாக அவர்மீது பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டிருந்தது. விசாரணையின்பின் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு நீதிபதி எதிரிக்கு இரண்டு வருட கடுழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.
தண்டனையை எதிர்த்து எதிரி சுப்பிரீம் கோட்டிற்கு அப்பீல் செய்திருந்தார். அப்பீலை விசாரித்த உயர் நீதிமன்றம் எதிரியின் தண்டனையை ரத்துச்செய்துஎதிரியை விடுதலை செய்திருந்தது.
நேற்று எதிரி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜராகிய போது நீதிபதி எதிரியை உயர்நீதிமன்றம் விடுதலை செய்திருப்பதாக அறிவித்து செய்தார்.

## ஆசிரிய சங்க நிர்வாகிகள்

மன்னார், திங்
அகில இலங்கை அரசினர் பாடசாலைத்தமிழர் ஆசிரியர் சங்க மன்னார்க்கிளை வருடாந்தப் பொதுக் கூட்டம் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி மண்டபத்தில் திரு. ச. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.
பிரதம விருந்தினர்களாக மன்னார் மாவட்ட வித்தியா ஆலோசகரும் வட்டார வித்தியாதிகாரியும் கலந்து கொண்டனர். தாய்ச்சங்க பிரதிநிதிகளும்சமுகமளித்திருந்தனர்.
புதுவருடஉத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.
தலைவர்: வி அரியநாயகம் உப-தலைவர்கள்: ச முத்துக்குமார், ஆ பூபாலன் காரியதரிசி: க பசுபதி உப-காரியதரிசி- க செல்லத்துரை, தனாதிகாரி: ச சுந்தரம்பிள்ளை நிர்வாகசபை உறுப்பினர்களாக எஸ்-ஆர் குமாரத்தினம், சு. நடராசா, பெ. சிதம்பரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# செய்திச் சுருக்கம்

### தற்கொலை
கந்தப்பளை கோர்ட்லோஜ் தோட்டத்தைச் சேர்ந்த ருக்மணி என்ற இளம் பெண் ஆறு மாத தாம்பத்திய வாழ்வு கசந்ததால் தீமூட்டித் தற்கொலைசெய்து கொண்டார். இக்கோர சம்பவத்தைக் கண்ட வேறொரு பெண்ணும் அதிர்ச்சியால் மரணமடைந்தார்!

ஃ ஃ ஃ

### இரண்டாம்பரிசு
பம்பாய் தமிழ்ச் சங்கம் நடத்திய நாடகப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்ற தமது நாடகப் பரிசுத் தொகையினை பெற்றுக்கொள்ள திரு. எஸ். பரமசாமி பம்பாய் செல்ல இருக்கிறார்.

ஃ ஃ ஃ

### ஒத்திவைப்பு
கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை தமது கிழக்கிலங்கை விஜயத்தை ஒத்திவைத்துள்ளார்.

ஃ ஃ ஃ

### 13-வது தண்டனை
வீரப்பன் மாணப்பனை ஜேப்படி செய்து கிறிஸ் கத்தியால் குத்தியதாக கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த வீராசாமி சுப்பையாவிற்கு 6 வருடக் கடுங்காவல் தண்டனை நீதியரசரால் விதிக்கப்பட்டது. எதிரிக்கு இது 13-வது தண்டனையாகும்.

ஃ ஃ ஃ

### புதிய 'ரகிங்'
பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த புதிய மாணவர்களைக் கொண்டு பழைய மாணவர்கள் பேராதனை இந்துக் கோவில் கட்டிட வேலைக்கு வேண்டிய மண், கல்லை சுமப்பதை புதிய 'ராகிங்' ஆக நடாத்துகிறார்கள்.

## பிணையில் சென்றனர்

யாழ்ப்பாணம், செவ்.
பீடிக் கம்பெனி ஒன்றில் லேபலைப் பாவித்ததாக இருவரை யாழ்ப்பாணம் பொலிசார் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்தனர்.
யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. வி. ஜெ ராஜரத்தினம் இருவரையும் தலா 150 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து, கட்டளை பிறப்பிக்கப்பட்டதும் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

## திருட்டு

கிளிநொச்சி, திங்கள்
கிளிநொச்சி நீர்ப்பாசனக் கந்தோரில் கடமையாற்றும் திரு. என். கணபதிப்பிள்ளையின் வீட்டில் கடந்த இரவு திருடர்கள் புகுந்து தாலிக்கொடி, ரேடியோ, மணிக்கூடு உடுப்புகள் ஆகியன உட்பட அநேக பொருட்களைக் களவாடிச் சென்றுள்ளனர் என்று கிளிநொச்சிப்பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## பாதை சீர்கேடு

சுழிபுரம், செவ்
சுழிபுரம் காளுவான் சந்தியிலிருந்து வடக்கு நோக்கிச்செல்லும்பெரியதம்பிரான்கோவில்பாதை பெரிதும் சீர்கேடடைந்துள்ளது. இதனால் மழை பெய்யும் சமயத்தில் வாய்க்காலோ, குளமோ என்று இதை சந்தேகிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.
காங்கேசன்துறையைச் சேர்ந்த சின்னவன் செல்லன் என்பவர் அனுமதியின்றி சாராயம் விற்றதாகக் காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரியைக் குற்றவாளியாகக்கண்ட நீதிபதி எதிரிக்கு 200 ரூபாய் அபராதம் விதித்தார்.

# தீபாவளித் திரை விருந்து

## இன்று முதல்

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) |
| மொடேர்ண் (பண்டாரவளை) | மொடேர்ண் (பதுளை) | விஜிதா (ஹட்டன்) |

நடிகர் திலகம்
**சிவாஜிகணேசன்**
தேன்மொழியாள்
**தேவிகா**
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி,
நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்

# ஆண்டவன் கட்டளை

இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவதை தடுப்பு ஆர்ப்பாட்டத்தில் பலாத்காரம் கார்களும், கட்டிடங்களும், தீயிடப்பட்டன

## காமராஜர், மத்திய மந்திரி இல்லங்களும் கொளுத்தப்பட்டன

### பொலிசார் சுட்டதில் 7 பேர் பலி; ஊரடங்கு அமுல்; இராணுவமும் சேவைக்கு அழைக்கப்பட்டது

புதுடில்லி, நவ. 8

**பசுவதையை எதிர்த்து ஆட்சேபம் தெரிவிக்கும்முகமாக நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள், வன்முறைச் செயல்களின் விளைவாக ஏழுபேர் உயிரிழந்தனர்; நூற்றுக்குமதிகமானவர்கள் காயமடைந்தனர்.**

**ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏராளமான அரசாங்கக் கட்டிடங்களையும் பொதுச் சொத்துக்களையும் தீயிட்டு நாசமாக்கினர். வீதியில் நின்றுகொண்டிருந்த மோட்டார் கார்களும் வண்டிகளும் தீமூட்டப்பட்டன. தியேட்டர்கள்; தனியாருக்குச் சொந்தமான கடைகளும் எரிக்கப்பட்டன.**

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. கே. காமராஜரினதும் மத்திய மந்திரி ஒருவரினதும் வீடுகளின் ஒருபகுதியையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயிட்டு கொளுத்தினர்கள்.

#### பொலிசார் சுட்டனர்

பாராளுமன்றக் கட்டிடத்துக்கு முன்பாக நின்றுகொண்டு பசுவதையைத் தடைசெய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் பொலிஸ் தடையைமீற முயற்சிக்கையில் பொலிசார் முதலில் தடியடிப்பிரயோகமும் பின்னர் கண்ணீர்ப் புகை பிரயோகமும் இறுதியில் துப்பாக்கிப்பிரயோகமும் நடத்தினர். பொலிசார் சுமார் பதினைந்து நிமிட நேரம் வரை நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்று வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர்.

பாரிலிமெண்டுக்கு முன்னால் இருந்து கலைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் கார்களையும் ஸ்கூட்டர் வண்டிகளையும் தாக்கி சேதப்படுத்தியதுடன் அவற்றின்மீது பெட்ரோல் ஊற்றித் தீயிட்டுக் கொளுத்தினர்கள்.

#### வன்முறைச் செயல்கள்

பாரிலிமெண்டுக்கு அருகேயுள்ள அகில இந்திய வானொலிக் கட்டிடத்தின் ஒரு பகுதியை ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயிட்டனர்.

#### பிரசங்கத்தின் எதிரொலி

ஜனசங்கக் கட்சியின் உறுப்பினரான சுவாமி ராமேஸ்வரநந்த் பொதுக்கூட்டமொன்றில் நிகழ்த்திய பிரசங்கத்தைத் தொடர்ந்தே ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறைச் செயலில் ஈடுபட்டதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன. இன்று காலை கிடைக்கப்பெற்ற கடைசிச் செய்திகளின்படி, சுவாமி ராமேஸ்வரநந்தும் வேறு பலரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொதுக் கட்டிடங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் நாசமாக்கத் தொடங்கியதும் பொலிசார் இவர்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். இதனையும் மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிசாரின் மீது கற்களை வீசத்தொடங்கியதும் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன் விளைவாக சிலர் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர்.

#### காமராஜர் இல்லம்

பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து ஓட்டமெடுத்த ஆர்ப்பாட்டக்காரர்கள், வீதிகளில் நின்றுகொண்டிருந்த வாகனங்களையெல்லாம் தீயிடத் தொடங்கினர். அரசாங்கக் கட்டிடங்கள், வங்கிகள் தனியார் கடைகள், திரைப்பட மாளிகைகள் எல்லாவற்றுக்கும் இவர்கள் தீயிட்டனர். அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. கு. காமராஜர், மத்திய மந்திரி ஒருவர் ஆகியோருடைய இல்லங்களும் தாக்கப்பட்டு ஒருபகுதி தீயிடப்பட்டது.

#### ஊரடங்குச்சட்டம்

நகரில் ஏற்பட்ட மோசமான சம்பவங்களைத் தொடர்ந்து நேற்று 48 மணிநேர ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. இருந்தபோதிலும் நேற்றிரவு பலாத்கார சம்பவங்கள் எதுவும் இடம்பெறாததால் இன்று காலை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டது. ஆனால் பதினைந்து நாட்களுக்கு டில்லியில் ஊர்வலங்கள் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள், கல்லூரிகள் நேற்றும் இன்றும் தொடர்ந்து மூடப்பட்டிருந்தன.

#### இராணுவம் அழைக்கப்பட்டது

நேற்று இடம்பெற்ற வன்முறைச் செயல்களை அடக்குவதற்கு இராணுவம் அழைக்கப்பட்டபொழுதிலும் அவர்களின் சேவை பயன்படுத்தப்படவில்லை. இராணுவம் இப்பொழுது தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

#### பிரதமர் பார்வையிட்டார்

இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்றுமாலை நகரின் பல பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டார். ஆர்ப்பாட்டக்காரர்களின் வன்முறைச் செயல்களினால் கருகிக்கிடந்த ஏராளமான மோட்டார் கார்களையும் வண்டிகளையும் மற்றும் சேதமடைந்த கட்டிடங்களையும் அவர் நேரில்பார்வையிட்ட பின்னர் பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்குச் சென்று நிலைமையை ஆராய்ந்தார். உள்துறை மந்திரி திரு. குல்ஸாரிலால் நந்தாவும் பல இடங்களையும் சென்று பார்வையிட்டார்.

நேற்றைய சம்பவங்களில் காயமடைந்தவர்களில் பல பொலிஸ் கான்ஸ்டபிள்களும் உள்ளனர்.

## "கட்டுப்பாடு இல்லாமல் சுதந்திரம் கிடையாது"

புதுடில்லி, நவ 8

நேற்று சாரணர்படைக் கூட்டமொன்றில் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் பேசுகையில், நாட்டில் சட்டம், ஒழுங்கை பாதுகாக்கவேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

'சட்டமின்றி சுயேச்சை இல்லை. கட்டுப்பாடு இல்லாமல் சுதந்திரம் கிடையாது' என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

'நாட்டிலுள்ள ஒரு பிரிவினர், உரிமை மட்டுமே உண்டு என்று நினைத்துத் தங்கள் கடமைகளைச்செய்ய மறந்துவிடுகின்றனர். இந்த மனப்போக்கு மாறவேண்டும்' என்று அவர் கேட்டுக்கொண்டார்.

ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதினாலும் பொதுச்சொத்துக்களைச் சேதப்படுத்துவதினாலும் எவருக்கேனும் இலாபம் கிடைக்கப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## கம்போடியா எல்லைக்கருகே 500 வியட்காங்கியர் பலி

சைகோன், நவ. 8

கம்போடிய எல்லைக்கருகே வியட்காங்கியரும் அமெரிக்கத் துருப்புகளுக்குமிடையே ஏற்பட்ட மூன்று நாள் சண்டையில் சுமார் 500 வியட்காங்கியர் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையான சண்டை நடைபெற்ற இடத்தில் 423 வியட்காங்கியரின் சடலங்களைத் தாங்கள் கண்டதாக அமெரிக்க இராணுவ உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே வடக்கு வியட்னாமில் அமெரிக்க விமானங்கள் நேற்று ஹனோய்க்கு அருகே பெட்ரோல் குதங்கள்மீது தாக்குதல் நடத்தின என்றும் அமெரிக்க விமானமொன்று ஹனோய்க்கு அருகே சுட்டு வீழ்த்தப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விமானத்தின் விமானி தப்பிவிட்டாராம்.

## காமராஜர் கலந்துகொண்ட கூட்டத்தில் கலாட்டா

### மேடைநோக்கி கற்கள், செருப்புகள் வீச்சு

இந்தூர், நவ 8

இங்குள்ள சுபாஷ் மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டதைத் தொடர்ந்து திரு. கே. காமராஜர் தனது பேச்சை இடையிலேயே நிறுத்தவேண்டி ஏற்பட்டது.

இக்கூட்டத்தில் நிதிமந்திரி திரு. மொரார்ஜிதேசாயும் பல மந்திரிகளும் கலந்துகொண்டனர் சுமார் 20,000 பேர் இக் கூட்டத்துக்கு சமுகமளித்திருந்தனர்.

திரு. மொரார்ஜி தேசாய் பேச எழுந்ததும் கூட்டத்தினர் கூச்சல் போட்டனர். அமைதியாக இருக்குமாறு அவர் பல தடவைகள் கேட்டுக்கொண்டும் கூட்டத்தினர் கூச்சலிட்டுக்கொண்டே இருந்தனர்.

''முதலில் காமராஜர் பேசவேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள்போல் இருக்கிறது. ஆகையால் அவரே பேசட்டும்'' என்று திரு மொரார்ஜி கேட்டுக்கொண்டு அமர்ந்தார். இதன் காரணமாக திரு. கே. காமராஜர் பேச ஆரம்பித்தார். கூட்டத்தினரின் கூச்சல்கள் அதிகரித்தன. ஒலிபெருக்கிகள் இயங்க மறுத்தன. பொதுமக்கள் எல்லோரும் எழுந்துகொண்டு கூச்சல் போடவே திரு. காமராஜர் பேச்சை இடையில் நிறுத்திவிட்டார்.

மேடையை நோக்கி கற்களும், செருப்புகளும், பிளாஸ்டிக் பைகளும் வீசப்பட்டன. இதனைத் தொடர்ந்து தலைவர்கள் கவரில் திரும்பிவிட்டனர்.

## துணைவேந்தர் காலமானர்

பங்களூர், நவ. 8

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் சாருவேல் ரங்கநாதன் (89 வயது) நேற்று பங்களூரில் காலமானர்.

## பிரயாணியிடம் ரூ. 200,000 தங்கம்

புதுடில்லி, நவ. 8

பம்பாயிலிருந்து புதுடில்லிக்கு விமானத்தில் வந்த ஒரு பிரயாணியிடமிருந்து இரண்டு லட்சம் ரூபா மதிப்புள்ள தங்கம் கைப்பற்றப்பட்டது.

## சமூகசேவகி காலமானர்

புதுடில்லி, நவ. 8

பிரபல சமூகசேவகி திருமதி இராமேஸ்வரி நேரு (81 வயது) நேற்றுக்காலமானர். மகாத்மாகாந்தியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த இவர் பல நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார்.

## தேர்தல் விஞ்ஞாபனம்

நாகபுரி, நவ. 8

பாரதீயஜனசங்கம்தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் சீன, பாகிஸ்தான் ஆகியவற்றின் ஆக்கிரமிப்பை ஒழிப்போம். நெருக்கடிப்பிரகடனம் நீக்கப்பட்டு இந்திய பாதுகாப்புச் சட்ட விதிகள் ரத்து செய்யப்படும். இந்திய- பாகிஸ்தான் நட்புறவை ஏற்படுத்துவோம். என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளன.

## மாண்டவர் 31 ஆக அதிகரிப்பு

சென்னை, நவ. 8

கடந்த வாரம் சென்னையில் வீசிய புயலினால் மாண்டவர்கள் தொகை 31ஆக அதிகரித்துள்ளது. செங்கல்பட்டில் மாத்திரம் 3,800 கால் நடைகள் பலியாகின.

## ஜனாதிபதி ஆட்சி நீடிப்பு

திருவனந்தபுரம், நவ. 8

கேரளத்தில் ராஷ்டிரபதி ஆட்சிமேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிக்கவேண்டும் என்றுராஜ்யசபா அங்கீகரித்துள்ளது.

## தீர்மானம் தோல்வி

புதுடில்லி, நவ. 8

மத்திய மந்திரி சபைமீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை அதிகப்படியான மேலதிக வாக்குகளினால் தோல்வியடைந்தது.

## அபராதம்

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவைச் சேர்ந்த கே. மனுவேல் பெர்ணண்டோ என்பவர் சட்டவிரோதமாக வடிசாராயம் வடித்ததாக முல்லைத்தீவு கலால்பரிசோதகர் திரு. எஸ். இம்மெயிலினால் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். பரமகுரு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்ளவே நீதிபதி ரூபா 350/- அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பணிவுடனிருங்கள். எல்லா உயிர்களையும் மானசீகமாக வணங்குங்கள். பகட்டு, செருக்கு, வெளிவேடம் ஆகியவற்றை அகற்றுங்கள்.

—சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box 49, JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 189

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஐப்பசி மீ 24 உ (9-11-66)


## இந்தியாவில் கிளர்ச்சி

பசுவதை தடைசெய்யப்படவேண்டுமெனக் கோரி இந்தியப் பார்லிமென்ட் கட்டிடத்தின் முன்னால், ஜனசங்கக் கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்டம் பலாத்காரச்செயல்களைக் கட்டவிழ்த்துவிட்டதன் விளைவாக, அதைக் கட்டுப்படுத்த பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஏழுபேர் பலியாகியிருக்கின்றனர். பசுவதைத் தடுப்பு ஆர்ப்பாட்டம் மட்டுமல்ல அற்ப விஷயங்களுக்கும் ஆர்ப்பாட்டம் ஆரம்பிப்பதும் அது பலாத்காரச் செயல்களுக்கு வழிகாட்டுவதும் சமீபகாலமாக இந்தியாவில் அதிகரித்துவருகிறது. இது இந்திய மக்களுக்கு மட்டுமல்லாது ஆசியாவில் ஜனநாயகம் நிலைபெறவேண்டுமென விரும்பும் அனைவருக்கும் கவலையளிப்பதாகும்.

ஆசியாவில் மிகப்பெரிய ஜனநாயக நாடாக விளங்குவது இந்தியா. புதிதாக விடுதலையடைந்த நாடுகள் இந்தியாவையே பல விஷயங்களுக்கும் பின்பற்றுகின்றன. ஆசியாவில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு தூணாகவே இந்தியாவை இதர நாடுகள் கருதுகின்றன. மேற்கு நாடுகளும் இந்தியாவின் ஜனநாயக வளர்ச்சியைக்கண்டு ஆறுதலடைந்தன. இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கையாலும் அதன் உள்நாட்டு அமைதி, ஸ்திரமான ஆட்சி ஆகியவைகளைக் கண்டும் சோவியத் யூனியனும் மற்றும் சோஷலிஸ்ட் நாடுகளும் இந்தியாவுக்கு உதவியும் ஆதரவும் அளித்துவந்தன.

காந்தியும், நேருஜியும் காட்டியவழியை சாஸ்திரியும் தொடர்ந்து பின்பற்றினார். இன்று திருமதி இந்திராவும் பின்பற்றி வருகிறார். என்றாலும் நேருஜியின் பின் இந்தியா எப்படி இருக்கும் என்று அன்றே சந்தேகம் கொண்டவர்களுக்கு இன்று இந்திய அரசியல் கட்சிகள் சிலவும் அரசியல் வாதிகள் சிலரும் தங்கள் செயல்களால் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்துகின்றனர். இச்செயல்களினால் இந்தியத் தலைவர்களோ, இந்திய மக்களோ நிச்சயம் பெருமைகொள்ள முடியாது. பொதுத்தேர்தல் நெருங்குகிறது. இதை எதிர்பார்த்து, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த எதிர்க்கட்சியினர் கிளர்ச்சிகளையும் ஆர்ப்பாட்ட இயக்கங்களையும் நடத்துவது புதுமையல்ல. ஆனால் ஆந்திர உருக்காலை விஷயத்திலும் மற்றும் ராஜ்ய விவகாரங்களிலும் ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களே ஆர்ப்பாட்டங்களுக்கும் கிளர்ச்சிகளுக்கும் ஊக்கமும் உதவியும் அளிப்பதுதான் விந்தையாக இருக்கிறது. இந்தியாவுக்கு அதன் எல்லைகளில் வெளியார் ஆக்கிரமிப்புத் தொல்லைகள் இன்னும் முற்றாக நீங்கிவிடவில்லை. வெளியார் நாட்டைத் தொல்லையிலிருந்து பாதுகாக்கவேண்டிய இச்சமயத்தில், நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்களே உள்நாட்டில், அரசியல் காரணமாக வன்முறைச் செயல்களுக்கு ஆதரவளித்து உள்நாட்டு அமைதியைக் குலைக்க உடந்தையாக இருப்பது வேதனையும் வெட்கமும் அளிப்பதாகும்.

இன்று இந்தியாவுக்கு மிகமிக அவசியமாகத் தேவைப்படுவது தேசிய ஒருமைப்பாடுதான். இரும்புபோன்ற உறுதி தேவையுள்ள இச்சமயத்தில் உருக்காலை வேண்டுமென ஆர்ப்பாட்டம் நடத்தி தேசத்தின் சொத்துக்களுக்குச் சேதம் விளைப்பதும் பசுவதையைத் தடைசெய்யக்கோரி பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டு நாட்டின் அமைதியைக் குலைப்பதும் நல்லதல்ல, ஆந்திராவில் மட்டுமல்ல நாட்டின் எந்தப் பகுதியிலும் இப்போதைக்கு உருக்காலை நிறுவக்கூடிய நிலையில் நாட்டின் பொருளாதார நிலை இல்லை என்று இந்தியப் பிரதமர், தெளிவாக, உறுதியாக அமைதியாக தெரிவித்து கிளர்ச்சிக்குப் பணிய மறுத்துள்ளது பாராட்டத்தக்கது. இதே உறுதியை அவர், தொடர்ந்து கடைப்பிடிக்கவேண்டும். தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கக்கூடிய எந்தச் செயலையும், ஜனநாயகத்துக்குமாறான பலாத்காரச் செயல்களை, எந்த முறையிலும் உறுதியுடன் அடக்க பிரதமர் இந்திரா தயங்குவதற்கு அவசியமில்லை. கிளர்ச்சிகளுக்கும் பலாத்காரச் செயல்களுக்கும் இடமளித்தால் இந்தியாவில் ஜனநாயகம் சீரழிந்து அதனால் ஆசியாவிற்கே அபாயமேற்படலாம். இந்தியப் பிரதமரின் உறுதியான நடவடிக்கையையே ஆசிய நாடுகள் பலவும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றன.

பசுவதையைத் தடைசெய்யவேண்டுமென்ற கோரிக்கைகளிலும் மற்றும் சில கோரிக்கைகளிலும் நியாயமிருக்கலாம். ஆனால் அவைகளைப் பெறுவதற்கு ஜனநாயக நாட்டில் ஜனநாயக முறையில் முயற்சி செய்யவேண்டும் இதற்கு பொதுத்தேர்தல் நல்ல வாய்ப்பளிக்கிறது. இதைவிடுத்து நாட்டு மக்களுக்கும் சொத்துக்களுக்கும் சேதமேற்படுத்தி தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்கும் நடவடிக்கைகளை அடக்கியே தீரவேண்டும். இதில் தயவுதாட்சண்யத்துக்கு இடமில்லை.

### பள்ளிமுனையில் நெசவு நிலையம்

மன்னார், செவ்வாய்

மன்னார் பள்ளிமுனை வட்டாரத்தில் மாதர்களுக்கென அரசாங்கத்தினரால் ஒரு நெசவுப்பயிற்சி நிலையம் உருவாகியிருக்கிறது. இந்நிலை யக்கட்டட வேலைகள் இவ் [illegible]

## கொழும்பைச் சுற்றிய சதுப்பு நிலத்தை மீட்டல்

முத்துராஜவெல உட்பட, கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள சதுப்பு நிலங்களை மீட்கும் பிரச்னை அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் கவனத்தை ஈர்த்து வந்தது. வர்த்தக, கைத்தொழில் விஸ்தரிப்பினாலும், கிராமப் புறங்களிலிருந்து வேலை தேடி வருவோரின் எண்ணிக்கை பெருகி வருவதனாலும் கொழும்பு நகரின் ஜனத்தொகை அதிகரித்து வருவதனால் இந்த நிலமீட்புப் பிரச்னை மிக முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இம்மகத்தான பிரச்னையை உணர்ந்துள்ள இன்றைய அரசாங்கம், கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சதுப்பு நிலமாக உள்ள பெரும் பகுதியை மீட்பதற்கு அதிமுக்கியத்துவம் அளித்துள்ளது. இந்நிலத்தை மீட்டு, சமூக பொருளாதார தேவைகளுக்குத் திட்டமிட்டுப் பயன்படுத்தினால் நிலத்துக்குள்ள நெருக்கடி நிச்சயம் தளரும். இத்தகைய நெருக்கடியே எமது தலைநகரின் வளர்ச்சியைத் தடைப்படுத்திக்கொண்டிருந்தது.

ராஜாங்க அமைச்சர், காணி, நீர்ப்பாசன அமைச்சர், உள்ளூராட்சி அமைச்சர், பொதுவேலை, தபால், தந்திப் போக்குவரத்து அமைச்சர் ஆகியோரைக் கொண்ட ஒரு மந்திரிசபை உபகுழு 1965 நவம்பர் மாத முற்கூற்றில் கூடி, கொழும்பிலும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள சதுப்பு நிலங்களை மீட்டுத் தக்கவாறு பயன்படுத்தல் பற்றி ஆராய்ந்தது. இப்பெரு முயற்சியைத் துரிதமாக நிறைவேற்றுவதெனின் வெளிநாட்டு உதவி பெற்றாக வேண்டும் எனவும் இக்குழுவின் கருத்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது. நிலமீட்பு வேலையைப் பல சட்டங்களாகப் பிரிக்கவேண்டியிருக்கும் எனக் குழு ஒப்புக்கொண்டது. மீட்கப்படும் நிலம் விவசாயத்திற்கு உதவாது என்பதும், கைத்தொழில் வாச தேவைகளுக்கான சட்டங்களை நிறுவவே பெரிதும் பயன்படும் என்பதும் குழுவின் பொதுவான அபிப்பிராயம். கொழும்பு நகரையும் அதன் சுற்றுப்புறங்களையும் விருத்தி செய்ய 6000 ஏக்கர் நிலத்துக்கு மேல் கிட்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. சிறு நகரங்கள், கைத்தொழில் நிலையங்கள், குடியிருப்புப் பகுதிகள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றை அமைக்க இந்நிலத்தைப் பயன்படுத்தலாம்.

சமர்ப்பிக்கப்பட்ட இரு திட்டங்களில் காணப்பட்ட பிரேரணைகளை அமைச்சரவை உபகுழு பொதுவாக ஏற்றுக்கொண்டது. நீர்ப்பாசனப் பகுதியால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளில் காணப்பட்ட வடிகாலமைப்பு, நிலமட்டப் பொதுத் திட்டத்தில் அமையக்கூடியவாறு, மாளிகாவத்தையில் சுமார் 75 ஏக்கர் நிலத்தைப் புனரபிவிருத்தி செய்வதற்கான குறிப்புத்திட்டமொன்றும், அமுலாக்கப்படுவதற்காக உபகுழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கொழும்பு மாவட்டத்தைப் போன்றதொரு அபிவிருத்தியடைந்த பிரதேசத்துக்குள் இம்மாதிரியான பெரிய விஸ்தீரணத்தைக் கொண்ட நிலத்தை மீட்கும் பணியில் எண்ணற்ற பிரச்னைகள் தோன்றக்கூடுமாதலால் இத்தேவைக்கு நியதிச்சட்ட முறையான சபையொன்று [illegible]

காணி, நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சரின்கீழ் பின்வரும் கடமைகளுடன் அமைக்கப்படவேண்டுமென்று அமைச்சரவை உபகுழு கருதிற்று:-

(1) இச்சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு வடிகாலமைப்பையும் வெள்ளநீர் வெளியேறும் கால்வாய்களையும் அளிப்பதற்கு அவசியமான வேலைகளைச் செய்வதற்கும் அவற்றைப் பராமரித்தற்கும் அதிகாரமிருத்தல்.

(2) இச்சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளவையும் வீடுகள் கட்டுவதற்கு உகந்தவையுமான நிலங்களை நிரப்பிச் செப்பனிடும் வேலைகளைமேற்கொள்வதற்கு அதிகாரமிருத்தல்.

(3) வீதிகள், மின்சாரக்கம்பிகள், நீர்விநியோகம் முதலானவற்றை அமைத்தல்.

(4) நிலமீட்பு செய்யப்பட்ட பிரதேசத்தின் நகர அமைப்புத் திட்டமிடலும் அபிவிருத்தியும்.

(5) நிலமீட்பு செய்யப்பட்ட பிரதேசத்துக்குள் இருக்கும் தனியாருக்குச் சொந்தமான காணிகளைச் சுவீகரிப்பதற்கு அதிகாரமிருத்தல்.

(6) விற்பனை மூலம் அல்லது வாடகை செலுத்தி உரிமையாக்கும் அடிப்படையில் காணிகளை வழங்கும் அதிகாரம் இருத்தல்.

கொழும்பு நகரிலும் அதன் சுற்று வட்டாரத்திலுமுள்ள சதுப்பு நிலங்களை மீட்பதற்கான தொழில்நுட்ப அறிக்கையில் இப்போது வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய அல்லது நீர் தேங்கியுள்ள சுமார் 2000 ஏக்கர் நிலத்தை ஆறு கோடி ரூபா செலவில் நிலமீட்புச்செய்து நல்ல முறையில் பயன்படுத்துவதும் அடங்கியிருக்கிறது இதனால் மீட்கப்பட்ட நிலங்கள், விரைவாக விரிவடைந்துவரும் தலைநகரின் முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பல்வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும்

முத்துராஜவெல நிலங்களை மீட்பதற்கான அறிக்கையில் (இங்கு 5320-க்கு அதிகமாள ஏக்கர் நிலம் சதுப்பாக உள்ளது) 4,223 ஏக்கர் நிலத்தை சுமார் 12 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் மீட்பதற்கான திட்டம் அடங்கியிருக்கிறது. மீட்கப்படும் நிலத்தில் பெரும் பகுதியை உறைவிட தேவைகளுக்காகவும் சில பகுதிகளை விவசாயத்துக்காகவும் பயன்படுத்தலாம்.

## நாட்டிலும் நகரிலும்

இந்தியாவில் தற்சமயம் 25 கோடி மாடுகள் (எருமைகள் உட்பட) இருக்கின்றனவாம். முழு உலகத்திலுமுள்ள இவ்விலங்கினங்களின் தொகையில் இது மூன்றில் ஒரு பகுதியாகும். பெரும்பாலும் விவசாய நாடாகிய இந்தியாவில் கோமாதா தெய்வமாகவும் பூஜிக்கப்படுகிறாள். பசுக்களைக் கொலைப்படாதென்ற சட்டம் ஒன்று அங்கு நாடு பூராவும் இயற்றப்படவிருக்கிறது. ஆகையால் கால்நடைகளின் தொகை வரவர அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இத்தனை பிராணிகளுக்கும் போதிய தீவனம் அளிக்கும் அளவுக்கு இந்தியாவின் நிலச் செல்வம் இல்லையே என்று நிபுணர்கள் தலையை அடித்துக் கொள்ளுகிறார்கள் போதாக்குறைக்கு இந்தியாவில் விளையும் அரிசியிலும் கோதுமையிலும் கணிசமான அளவை சுண்டெலிகள் வேறு சாப்பிட்டுவிடுகின்றன!

இந்தியாவில் மட்டும் என்ன? இந்த வையகம் முழுவதிலுமே மனிதனுக்கும் விலங்கினம், பறவையினம், பூச்சியினம் முதலியவற்றிற்கும் இடையே பசிப்போர் பண்டைக்காலம் தொட்டு நடந்து வருகிறது. யானைகளும் பன்றிகளும் மான் மரைகளும் நம்நாட்டில் நெல்லையும் வாழையையும் கிழங்குகளையும் அழிக்கின்றன. கிளி முதலிய பல பட்சிகள் நெல், குரக்கன் வகைகளைச் சூறையாடுகின்றன. வெட்டுக் கிளிகளும், எறும்புகளும், வயல் நண்டுகளும் தானியப் பயிர்கள் வளரவிடாமல் வெட்டிக் கொட்டுகின்றன. சேமித்து வைக்கும் உணவுப் பொருட்களை எலிகளும் பூச்சிகளும் அரித்துச் சாப்பிடுகின்றன. இத்தனையும் போதாதென்று மனிதன் வசிக்கும் இருப்பிடங்களையே கறையான் முதலிய எறும்பு வகைகள் ஊடுருவி பஸ்மீகரமாக்குகின்றன.

(5-ம் பக்கம் பார்க்க)

## ரங்காச்சாரியின் கச்சேரி

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் அன்றிரண்டகூட்டம் சாமானிய கூட்டமல்ல. சங்கீத வித்வான்களும், ரஸிகர்களும், அபிமானிகளும் வேறு கலைஞர்களும், இன்று கர்நாடக சங்கீத உலகில் முன்வரிசையை எட்டிப்பிடித்துவிட்ட வித்வான் டி. கே. ரங்காச்சாரியைக் கேட்கவந்திருந்தார்கள். அவர்களுடைய குஷி வித்துவானையும் பிடித்துக்கொண்டது.

காவேரி வர்ணத்துடன் கச்சேரியைத் தொடங்கி ஸ்ரீரங்கத்தில் தியாகையரின் பஞ்சரத்னக் கிருதியைப் பாடிமுடித்தவுடனே கச்சேரி நன்றாகக் களை கட்டிவிட்டது. அடுத்துப் பந்துவராளி, மோகனம் ஆகியவற்றில் உருப்படிகளை பாடிவிட்டு கோபால கிருஷ்ண பாரதியின் திருவடி சரணம் என்ற காம்போதியை மிக உருக்கமாகப்பாடினார். தமிழ்ப் பாட்டாயினும் சரி, தெலுங்குப் பாட்டாயினும் சரி அக்ஷர சுத்தியுடன் சாஹித்தியத்தை உணர்ந்து பாடியதை எல்லோரும் பாராட்டினார்கள். [illegible] குடத்தவனி ராக ஆலாபனை யாழ்ப்பாணத்து ரஸிகர்களுக்கு உண்மையில் ஒரு புதிய அற்புதமான அனுபவமாயிருந்தது.

ராகம், தானம், பல்லவிக்கு தோடி ராகம் எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிர்பார்த்ததுபோல் வித்வானின் சிறப்புக்கள் யாவும் இதில் வெளிப்பட்டன என்று சொல்லவேண்டியதில்லை. தேவாரமும் பாரதியார் பாடல்களும் வெகுரஞ்சகமாயிருந்தன.

இப்பேர்ப்பட்ட முதல்தரமான கச்சேரியை ஒழுங்கு செய்த வட இலங்கை சங்கீத சபையினருக்கு ஈழத்து மக்கள் மிகவும் கடமைப்பட்டவர்கள். டிக்கட் கச்சேரியாயிருந்தும் மண்டபம் வழியசனைநிரம்பியிருந்தது வித்வானின் மேதைக்கும், புகழுக்கும் நல்ல சான்று.

கடந்த 25 ஆண்டுகளாக கர்நாடக சங்கீதத்தில் ஈடுபட்டுப்போன ரங்காச்சாரி அவர்களின் சாரீரம் புடமிட்ட தங்கம்போல நல்ல பாங்குடன் அமைந்துவிட்டது அரியக்குடி, செம்மங்குடி, சித்தூர் என்ற முத

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இந்துப் பல்கலைக்கழகம் இராமநாதன் நினைவுச்சின்னம்'

புன்னாலைக்கட்டுவன், செவ். சேர். பொன். இராமநாதன் தனது மரணசாசனத்தில் குறிப்பிட்டவாறு அவரது சொத்துக்களையும், பணத்தையும் இந்துமத வளர்ச்சிக்கும் ஆன்மகேட்டிறத்துக்குமான ஓர் இந்துப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதே இன்று இராமநாதனின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் ஒவ்வொருவரின் கடமையாகும்'' என்று முன்னாள் செனட்டரும், நியாயவாதியுமான திரு. எஸ். ஆர். கனகநாயகம் உடும்பராய் இந்துக் கல்லூரிச் சரித்திர அரசியல் மன்றக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

மன்றத் தலைவர் திரு. க. ஆனந்தராசாவின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது: ''இந்தியா சுதந்திரம் அடைந்ததன் பின்னர் 34 இந்துப் பல்கலைக்கழகங்களை நிறுவியதிலிருந்து, பல்கலைக்கழகமென்பது உலகியல் வாழ்வுக்கு மட்டுமன்றி ஆத்மீக வாழ்வுக்கும் அவசியமானதென்பது புலனாகிறது. இந்துப் பல்கலைக்கழகமென்றால் இந்து மதம் மட்டும் போதிக்கப்படுவதெனத் தவறாகக் கருதக்கூடாது. இயல், இசை, பண்பாடு, தேசிய விளையாட்டுகள் உட்படப் பல கலைகளும் அங்கு இடம்பெறும். அதேபோல சகல இன, மதத்தவருக்கும் பயிற்சி அளிக்கப்படும். ஆறுமுக நாவலருக்குப்பின் இந்து மதத்திலேற்பட்ட தாக்கநிலைக்கு முற்றுப்புள்ளியிட்டு மேனாட்டவரின் ஆட்சியில் அடக்கப்பட்டு இருந்த நமது மதத்துக்குப் புத்துயிர் கொடுப்பதே இந்து பல்கலைக்கழகத்தின் இலட்சியமாகும்''

---

## மன்னிப்புகோரியதால் விடுதலை

மாவிட்டபுரம், செவ். சங்கானையைச் சேர்ந்த வைரவன் சின்னையா அவரது மகனான சின்னவன் சந்திரன் தாக்கிப்படுகாயம் விளைவித்ததாக சங்கானைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டதும் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் சாட்சியமளித்தார். இதனைத்தொடர்ந்து நீதிபதி விசாரணையை இடையில் நிறுத்தி எதிரியைத் தகப்பனிடம் மன்னிப்புக்கேட்கும்படி உத்தரவிட்டார். மகன் தகப்பனுக்கு அருகில் சென்று ''ஐயா நான் செய்தது பிழை. என்னை மன்னியுங்கள்'' என்றார். அச்சமயம் தகப்பனின் கண்ணிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் சிந்தியது. மகனை மன்னிப்பதாகத் தகப்பன் கூறினார். இதன் பின் நீதிபதி எதிரியை எச்சரித்து விடுதலை செய்தார்.

---

## புகலிடம் அளித்ததாக வழக்கு

மாவிட்டபுரம், செவ்வாய் மயிலிட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பொன்னம்பலமும் அவரது பாரியாராகிய அமிர்தநாயகியும் தென்னிந்தியா இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் ரசிட்சாகிக் என்பவருக்கு இலங்கையில் சட்டவிரோதமாகப் புகலிடம் கொடுத்ததாக காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். திர்ச்சிங்கா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிபதி முன்னர் இவ்வழக்கில் ஓர் உத்தரவை ஆட்சேபித்துச் செய்யப்பட்ட அப்பிலுக்கு சுப்ரீம் கோர்ட்டிலிருந்து முடிவு வராததால் நீதிபதி வழக்கை அடுத்த 9-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

## வீடுகட்ட கடனுதவி விரைவில் கிடைக்கும்

கொழும்பு, செவ் வீடு கட்டுவதற்கு கடன் கோரி விண்ணப்பம் செய்தவர்களுக்கு கடன் உதவி விரைவில் கிடைக்கக் கூடிய வகையில் தொழில் வீடமைப்பு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இப்புதிய நடவடிக்கை காரணமாக விண்ணப்பதாரர் மூன்றிலிருந்து ஐந்து மாதங்களுக்குள் கடன் உதவியைப் பெறக் கூடியதாக இருக்குமென நம்பப்படுகிறது.

---

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

### ஆலயப்பிரவேசம்

சைவ ஆலயங்களைத் திறந்துவிடச்செய்ய கத்தோலிக்கரும், புரொட்டஸ்தாந்தியரும், தமிழ்ப் பௌத்தர்களும், கம்யூனிஸ்டுக்களும் சத்தியாககிரகம் செய்யப் போவதாகப் பறையடித்துக் கொண்டுதிரிகிறார்கள் எமக்கு வெட்கமாயும் துக்கமாயும் இருந்தது. ஆலயங்கள் திறக்கப்படவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்குக் கொஞ்சங்கூட இருக்க நியாயமில்லையென்பதைக் குழந்தைகளும்புரிந்துகொள்ளும்.

மனங்குழம்பிக் கொண்டிருந்த சைவ ஹரிஜன மக்களுக்கு 'சமூகக்குறைபாடும் சத்தியாக்கிரகமும்' என்னும் கூட்ட அறிவித்தல் மிகமிக உற்சாகத்தைத் தந்திருக்கிறது. அகில இலங்கைப்புகழ் பெற்றஒருகவிஞரும்' ஒருபுலவரும் சைவஹரிஜனமக்களுக்கு வழிகாட்ட முன்வந்துள்ளார்கள். சைவசித்தாந்தம் ஆகமம் என்பனவற்றை நன்குகற்ற அவர்கள் சைவக்குருமாரோடு நின்றுபிடிக்கக் கூடியவர்கள். மாமிசம்புசிக்காத உத்தம சைவர்கள் சிவதீட்சைபெற்ற ஆசாரசீலர்கள் ஆலயப்பிரவேசத்தைப்பற்றிப் பேச அவர்களுக்குத்தான் உரிமையுண்டு.

ஆ.ம. செல்லத்துரை
இந்துக்கல்லூரி ஆசிரியர் வதிரி

ஃ ஃ ஃ

### பஸ் பிரயாணம்

ஓரளவு பஸ்கள் உள்ள இந்நேரத்திலுங்கூட, யாழ்-பருத்தித்துறை பஸ்கள், முக்கியமான நேரத்திற்கு இல்லாமல் பிரயாணிகள் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். காலை 7 45 மணிக்குப்பின் 8-30 மணிவரை ஒரு பஸ்ஸேனும் கிடைப்பதில்லை. இதனால் தொழில் பார்க்கும் மக்கள் மிகவும் அவதியுறுகின்றனர். 7-45 க்கும் 8-30 க்கு மிடையில் செல்லும் பஸ்கள், ஒன்றில் 'கடுகதி' யாகவோ, அன்றேல் ''பாடசாலை சேவை'' யாகவோ செல்கின்றன. ஆகவே, காலை 7-45 க்கும் 8-30 க்குமிடையில் ஒரிரு பஸ்களையேனும், குறைந்தது கோப்பாயிலிருந்து யாழ்ப்பாணம் வரையுமாதல் சேவையிலீடுபடவிட இ. போ. ச. மேலதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ச. ஸ்ரீதரன்
கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

---

ஜனப்பிரதிநிதிகள் சபையில்

# உணவு, முந்திரிச்செய்கை; பாடசாலை இடநெருக்கடி

கொழும்பு, செவ் நேற்று நடைபெற்ற ஜனப்பிரதிநிதிகள் சபைக்கூட்டத்தில் உணவுப்பிரச்னை, பாடசாலை இடவசதி, வடபகுதியில் முந்திரிக் கொட்டைச் செய்கை ஜனத்தொகை அதிகரிப்பு போன்ற பலதரப்பட்ட விஷயங்கள் விவாதிக்கப்பட்டன.

சபாநாயகர் சேர். அல்பேர்ட் பீரிஸ் தலைமையில் நடைபெற்ற ஜனப்பிரதிநிதிகள் சபைக்கூட்டத்தில்உதவிக் கல்வி அமைச்சர் திருகாமினி ஜெயசூரியா சமசமாஜக்கட்சி அங்கத்தவர் திரு. ஆர். பி. பி. விஜயசுந்தரரின் கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கையில் பல பாடசாலைகளில் இட வசதியும், கட்டடவசதியும் குறைவு என்பதை தாம் அறிந்திருப்பதாகவும், விளையாட்டு மைதானங்கள் பல பாடசாலைகளுக்கு இல்லாதிருப்பது பற்றியும், தாம் அறிந்திருப்பதாகவும் தெரிவித்து இவற்றை நிவர்த்தி செய்வதற்கு உற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் இருக்கும் நிதிக்கேற்ப பாடசாலைகளுக்கு விளையாட்டு மைதானம் கிடைக்கச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் கூறினார்.

### வடபகுதியில் முந்திரிச் செய்கை

தம்புக்லை எம். பி.யும் சுதந்திரக்கட்சி அங்கத்தவருமான திரு. தென்னக்கோனின் கேள்விக்குப் பதிலளித்த காணி நீர்ப்பாசன உதவி அமைச்சர் சி. பி. ஜே' செனிவரத்தின யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், வவனியா ஆகிய இடங்களில் முந்திரிச்செய்கைக்காக 1965—66 ம் வருடத்தில் 14,195 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டதாகத் தெரிவித்தார். இவை விவசாய மந்திரதர இலங்கையருக்குக் கொடுக்கப்பட்டதாகவும் அவர் எடுத்துக் கூறினார். திரு. செனிவிரத்ன. தம்பதெனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா சார்பில் கேட்கப்பட்ட மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் இரத்மலானை நீர்ப்பாசன இலாகாவில் இயந்திர நுட்பப் பகுதியைச்சேர்ந்த 9 ஊழியர்கள் இந்த வருடம் ஜனவரி 8 ந்திகதி நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதற்காகத் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள் என்றார்.

திரு. ஆர். ஜி. சேனநாயகா கேட்ட மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் போக்குவரத்து அமைச்சர் திரு.ஈ. எம்.பி.குருனை கூறியதாவது:

மோட்டார் போக்குவரத்து இலாகாவில் சிங்கள உத்தியோகத்தருக்கு எதிராகப் பாகுபாடு காட்டும் இயக்கத்தைத் தமிழ் உத்தியோகத்தர்கள் ஆரம்பித்து இயக்கிவருவதாக நானொன்றும் அறியவில்லை. எந்தச் சிரேஷ்ட உத்தியோகத்தரும் பதவி உயர்வு விஷயங்களில் புறக்கணிக்கப்படவில்லை.

உணவு விஷயத்தில் சுயதேவையைப்பூர்த்தி செய்யுமுகமாக விவசாயத்துறையில் அனுபவமிக்க வெளிநாட்டுக் கம்பெனிகளை இங்கு வரவழைத்து இலங்கையில் உணவுற்பத்தியைப்பெருக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் எனக் கோரும் பிரேரணையை நியமன அங்கத்தவர் டாக்டர் ஏ. ரத்னா கொண்டு வந்தார்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தையும், ஓரளவு நீக்கலாமென அவர் தெரிவித்தார்.

---

## மரவரி முறை மாறவேண்டும்

யாழ்ப்பாணம், புதன் 'தேசவழமையை முன்னிட்டு சீர்திருத்தங்கள் சிறிது சிறிதாகத்தான்வர வேண்டும் என்றும் சொந்தமுதலைக்கொண்டு தொழில் செய்யும் ஸ்தாபனங்களுக்கு தொந்தரவுகொடுப்பது 29ம் ஷரத்து தேசவழமை பாதுகாப்புச்சட்டத்தை மீறியதாகுமெனவும் வேலணை மேற்கு மகா கணபதிப்பிள்ளையார் கோவில்சபை உறுப்பினர் திரு. மு. குமாரசுவாமிப்பிள்ளை பிரதமருக்கும் பார்லிமெண்ட் எம். பிக்களுக்கும் தெரிவித்துள்ளார்.

திரு. குமாரசுவாமி மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்தியாவில் மகாத்மா காந்தி மதுபானத்தை அறவே அகற்றி மற்றச் சீர்திருத்தங்களையும் நடைமுறைக்குக் கொண்டுவந்தார் வட மாகாணத்தில் ஏனைய மாகாணங்களிலும் இல்லாத மரவரி முறையை மாற்ற சட்டம் கொண்டுவரவேண்டும்.

'சைவசமய விவகார ஆலைப்பற்றி சைவசமயத்தவர்களே எடுத்துக்கூற உரிமையுடையவர்கள் எனவும் அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

---

## தீர்ப்பு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், செவ்வாய் சங்கானை பிராம்பத்தையைச் சேர்ந்தவரும் மாஜி பொலிஸ் கான்ஸ்டபிளுமான நவரத்தினம் அமிர்தலிங்கம்தனது சிறியதாயைத் தாக்கிக் காயம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். திர்ச்சிங்கா இன்று மாஜி பொலிஸ் கான்ஸ்டபிளைக் குற்றவாளியாகக் கண்டு தண்டனை வழங்குவதற்காக ரிமாண்டில் வைத்துள்ளார்.

இம்மாதம் பதினைந்தாம் திகதி வரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு தண்டனை வழங்குவதை அத்திகதி வரை ஒத்திவைத்துள்ளார்.

---

## அரிசிக்கு அதிகவிலை: சீனு கேட்கிறது

கொழும்பு, செவ். இலங்கைக்கு தற்போது வந்திருக்கும் சின வர்த்தக தூதுகோஷ்டி அரிசிக்கு அதிக விலை கேட்டுள்ளதாக அறியப்படுகிறது. இலங்கை ஒரு தொன் அரிசிக்கு 38 பவுண்கள் கொடுக்க முன்வந்துள்ளதாகவும் சீனு 43 பவுண்கள் கேட்டதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையுடன் வர்த்தகத் தொடர்பை விஸ்தரிப்பதற்காக சீனுவிலிருந்தும், ஐக்கிய அரபுக்குடியரசிலிருந்தும் உயர்தர வர்த்தகத் தூதுகோஷ்டியினர் இலங்கைக்குத் தற்போது வந்துள்ளனர்.

---

## எம். ஜி. ஆர். மன்றம்

கொத்மலை, செவ். கொத்மலை - கடியஞ்சேனை பஜாரில் உள்ள எம். ஜி ஆர். ஆதரவாளர்கள் ஒன்று சேர்ந்து கேதீபடி பஜாரில் எம். ஜி. ஆர். மன்றம் அமைக்க ஏற்பாடுசெய்து வருகின்றனர். இம்மன்றத் [illegible] தாகவும் தெரியவருகிறது.

---

## நாட்டிலும் நகரிலும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதன் இவற்றை நசுக்கொன்று அழிப்பதற்கு எத்தனையோ மார்க்கங்களைக் கையாளுகிறான். ஆனால் அவை எல்லாவற்றையும் வென்று கொண்டு இந்த அழிவுப் பட்டாளம் பெருகியவண்ணம் இருக்கிறது.

மனிதனை மனிதன்பிடித்துதின்பதில் பிராக்காயிருக்க ஒரு காலத்தில் பூச்சிகளும் கிருமிகளும் உலகத்தில் வெற்றிக்கொடி நாட்டி ஈற்றில் மனிதனையே கபளீகரம் செய்துவிடுமா?

ஃ ஃ ஃ

ஆயிரம் ரூபாய் அபராதம், அல்லது ஆறு மாதச் சிறை, அல்லது இரண்டும், பன்னிரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளை வீட்டு வேலையிலோ அல்லது வேறெந்த வேலையிலோ ஈடுபடுத்துபவர்களுக்கு இதுதான் சட்டப்படி விதிக்கப்பட்டுள்ள தண்டனை என்று கல்முனை மாவட்ட நீதிபதி சர்வதேச குழந்தைகள் வாரக் கொண்டாட்டத்தில் கூறியுள்ளார். 12-க்கும் 14-க்கும் உட்பட்ட சிறுவர் சிறுமிகளை வீட்டு வேலைக்கு வைத்திருக்கலாம். ஆனால் அவ்விதம் வேலைக்கு அமர்த்தப்படுபவர்களுக்கு வேலை செய்யும் நாட்களில் காலை 6 மணிக்கும் இரவு 8 மணிக்குமிடையில் நான்கு மணி நேர ஓய்வும், மாலை 8 மணிக்கும், காலை 6 மணிக்குமிடையில் பத்துமணி நேரம் தொடர்ச்சியான ஓய்வும், போயா முதலிய விடுமுறை தினங்களில் ஆக இரண்டு மணிநேர வேலையும், மூன்று மாதத்துக்கொரு தடவை ஏழு நாட்கள் தொடர்ச்சியான லீவும் கொடுக்கப்பட வேண்டும்.

சிறு பிள்ளைகளை வேலைக்கு வைத்திருப்பவர்கள் எல்லோரும் இந்த சட்டங்களை அனுசரிக்கிறார்களோ என்பது சந்தேகம். அதற்கு மாறாக சிறுவர் சிறுமிகளிடம் ஆடு மாடுகளைப்போல வேலை வாங்குவதுடன் நில்லாமல் அவர்களை அடித்து உதைத்து கொள்ளிக்கட்டையால் சுட்டு துன்புறுத்து இறவர்களையே எங்கும் காணக்கூடியதாயிருக்கிறது. மேற்படி சட்டங்களைப்பற்றி தெரிந்திருந்தால் அவர்கள் அவ்விதம் செய்வார்களோ என்பது சந்தேகம்.

—வழிப்போக்கன்.

---

## ரங்காச்சாரியின்...

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

பெரும் பாடகர்கள் இசை அரங்கத்திலிருந்து சிறிது சிறிதாக விலகிவரும் சமயம் ரங்காச்சாரி போன்றவர்கள் அவர்களுடைய இடத்தை நிரப்ப முன்வந்துள்ளார்கள்.

அவருக்கு பக்கவாத்தியம் வாசித்த ஈழத்து இசைக் கலைஞர்களாகிய வயலின் சண்முகானந்தம் முதலியோர் எத்தகைய வித்வானுக்கும் வாசிக்கச் சற்றேனும் சோடை போகாதவர்கள் என்பதை நன்கு நிரூபித்துவிட்டார்கள்.

—'பாலமூர்த்தி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்ற குழந்தையை கடலில் எறிய முயன்ருராம்

இமையாணன், செவ்

தாம்பெற்றெடுத்த பெண் குழந்தையை ஒரு தாய் கடலில் எறிந்து கொலைசெய்ய முயற்சிசெய்தாராம்.

இச்சம்பவம் வல்வெட்டித்துறை இந்திராணி வைத்தியசாலைக்கு முன் உள்ள 'ஊறணி' என்னும் கடற்கரையில் நிகழ்ந்ததாக அறியப்படுகிறது.

சின்னமணி என்ற பெயருடைய பெண்ணே இதைச் செய்ய முயன்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்தன் வயிற்றில் பிறந்த பெண் குழந்தையை குழந்தைபிறந்த ஐந்தாவது தினத்தன்று ஊறணி கடற்கரையில் எறியமுற்பட்டபோது இதனைக் கண்டவர்கள் அக்குழந்தையை இவரது கையிலிருந்து பறித்து குழந்தையைக் காப்பாற்றி இந்திராணி ஆஸ்பத்திரியில் இவரையும் குழந்தையையும் அனுமதிக்க முயற்சிசெய்ததாகவும் மேற்படி ஆஸ்பத்திரியில் தாய் அனுமதிக்கப்படுவதற்கு மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி நிர்வாகிகள் வல்வெட்டித்துறை பொலிசாருக்குஅறிவித்தல்செய்து அவர்களின் உதவியுடன் அப்பெண்ணையும் குழந்தையையும் ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் பின் அத்தாய்க்குமனநோய் இருக்கக்கூடுமென்ற சந்தேகத்தின் பேரில் அவரும் குழந்தையும் பருத்தித்துறை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டபோது அங்குமனநோய் நிபுணரான டாக்டர் அருளம்பலம் அவரைப் பரிசோதனையிட்டபின் அப்பெண்ணுக்கு 'மனநோய் இல்லையென்றும் காரியப்பைத்தியம் தான்' என்று கூறி மீண்டும் இந்திராணி ஆஸ்பத்திரிக்கே அனுப்பிவைக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

தற்போது அப்பெண்ணும் குழந்தையும் இந்திராணி ஆஸ்பத்திரியிலேயே சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இப்பெண் உற்ருர் உறவினர் அற்ற ஓர் அனாதையெனவும் தொண்டமானாறில் வசிப்பவரெனவும் தெரியவருகிறது.

## கல்ஓயா கமிட்டி

கொழும்பு, செவ்.

ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையிடம் ஒப்படைக்கப்படும் எதிர்கால அபிவிருத்தித்திட்டங்களுக்கு வழிகாட்டியாக அமையக் கல் ஓயா திட்டத்தின் முதலீட்டிலிருந்து பெறப்பட்ட சமூக, பொருளாதார நன்மைகளைக் கணிக்கும் பொருட்டு காணி, நீர்ப்பாசன, மின்சக்தி மந்திரி திரு. சி. பி. டி' சில்வா கமிட்டி ஒன்றினை நியமித்துள்ளார்.

ஓய்வுபெற்ற ஆடிட்டர் ஜெனரல் திரு டி. எஸ் டி. சில்வா. ஓய்வுபெற்ற பொது சேவை டைரக்டர் திரு. டி. பி. டி. எஸ். முனசிங்க, ஓய்வு பெற்ற உதவி நீர்ப்பாசன டைரக்டரும், நீர்ப் பெறு பேறுகள் சபையின் தற்போதைய பிரதம என்ஜினியருமான திரு. எஸ் ஆறுமுகம், மத்திய வங்கியிலிருந்து ஒரு பொருளாதார வல்லுநர் ஆகியோரடங்கிய இக்கமிட்டிக்கு திரு. பி. எச். பாமர் தலைவராகக் கடமையாற்றுவார் திரு. பாமர் இம் மாதம் 20-ம் திகதிக்குள் இலங்கை வந்து சேருவார்.

## விசாரணை

சென்னை, நவ. 8

சென்னை கடலில் பனாமா கப்பலொன்று தரைதட்டி இரண்டாகப் பிளந்த சம்பவம் குறித்து விரைவில் விசாரணை நடைபெறும்.

## அமைச்சர் திறந்து வைப்பார்

யாழ்ப்பாணம், செவ்

நல்லூர்தெற்கு சனசமூக நிலையத்தின் ஆதரவில் அரசாங்கத்தினால் அமைக்கப்பெற்ற புதிய நெசவுநிலையத் திறப்புவிழாவியாழக்கிழமை நடைபெறும்.

கற்பக விநாயகர் நெசவு நிலையத்தை வியாழக்கிழமை மாலை அமைச்சர் திரு டபிள்யு தஹநாயகா திறந்து வைப்பார்.

## கர்ப்பவதிகள் கஷ்டம்

தாளையடி, செவ்

செம்பியன்பற்றுவைத்திய சாலைக்கு குறிப்பிட்ட நாட்களில் சிகிச்சை பெறச்செல்லும் கர்ப்பவதிகள் பலவிதமான கஷ்டங்களுக்கும் ஆளாகின்றனர்.

வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறவரும் கர்ப்பவதிகளில் அதிகமானவர்கள் நெடுந்தூரத்திலிருந்து பஸ்ஸில் வருபவர்களாகும். காலையில் நேரத்துடன் இங்கு வந்தாலும் சில சமயங்களில் குறிப்பிட்ட டாக்டர்கள் இருக்கமாட்டார்களாம். வைத்தியசாலை பொறுப்பு வைத்தியரே மருந்துகொடுப்பாராம் தங்க வசதிகிடையாது, உணவும் பெறமுடியாத நிலையில் இங்கு வரும் கர்ப்பவதிகள் இதனால் பெரிதும் ஏமாற்றத்துடனே திரும்பவேண்டியிருக்கிறது.

## சிரமதானம்

கொடிகாமம், திங்கள்

''நாட்டில் பல நல்லவேலைகளை சிரமதானமூலம் செய்ய மக்கள் முன்வரவேண்டும். இப்படியான சிரமதான இயக்கத்திற்குப் பொதுமக்களாகிய நீங்களும், பாடசாலைச் சாரணர்களும் முன்வந்ததையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.''

என்றுதென்மராட்சிக்காரியாதிகாரிதிரு. இ. சிதம்பரப்பிள்ளை வடவரணியில் சிரமதானமூலம் பொதுமக்களும் பாடசாலைச் சாரணர்களும் ஓர் ஒழுங்கையைத் திருத்தும்போது கூறினார்.

## யாழ்தேவிக்கு பலி

உடுவில், செவ்வாய்

இன்று காலை கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு வந்த யாழ்தேவி கொக்குவில்ரயில்வேநிலையத்தைத் தாண்டி சிறிது தூரத்தில் ஒரு மாட்டை மோதியது. நிறைமாதக் கன்றுத்தாச்சியான அந்தப்பசு சிதறுண்ட நிலையில் தாய்வேறு கன்று வேறாக பிரித்தெறியப்பட்டது. காங்கேசன்துறைக்கு சென்று உடன்திரும்பிய அதே புகைவண்டி பசுவினை மோதிய இடத்திற்கு பக்கத்தில் ஒரு ஆட்டினையும் மோதிற்று. ஆடும் சிதறுண்ட நிலையில் தூக்கியெறியப்பட்டு இறந்தது

## மண்வெட்டி தட்டுப்பாடு நீங்கும்

உடுவில், செவ்வாய்

உணவு, விவசாய அமைச்சருக்கு. இப்பகுதியில் மண்வெட்டி தட்டுப்பாட்டினால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் உடனடியாக வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் உடுவில் கிராம சபை கேட்டுக்கொண்டது. அமைச்சர் உடுவில் கிராம சபைத் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், உடனடியாக 200 டஜின் மண்வெட்டிகளை இறக்குமதிசெய்ய ஒரு வர்த்தக ஸ்தாபனத்துக்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## இளம் பெண் மரணம்

கொடிகாமம், செவ்.

மிருசுவிலைச்சேர்ந்த திருமதி பிலிப்பையா என்னும் 22 வயது இளம்பெண் மரணமானர். இவரது மரணம் பற்றி விசாரணை நடைபெற்றது விசாரணையின் போது மரவள்ளிக்கிழங்கும் வாழைப்பழமும் சாப்பிட்டதாகவும் அஜீரணம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இஞ்சிச் 'சோடா' குடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

விபத்தினுல் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## "தீர்க்கமான முடிவு தேவை"

கொவிலாந்தை, செவ்.

''மலைநாட்டுக் குழந்தைகளின் போதனுமொழி விஷயத்தில் ஒரு தீர்க்கமான முடிவு ஏற்படவேண்டும். மொழி விஷயத்தில் தட்டிக்கழிக்கும் மனப்பான்மையை விடுத்து உறுதியான திட்டத்தை ஏற்படுத்த வேண்டும்'' என்று மலைநாட்டு தொழிலாளர் சங்கத்தலைவர் திரு. எம். எஸ். முத்தையா மலைநாட்டு பிள்ளைகளின் போதனுமொழி பற்றி பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தீபாவளிக்கு ஜவுளி

அனலைதீவு, செவ்

அனலைதீவிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் தனது பிடவைக்கடைக் கிளையில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கூப்பனுக்கு ஜவுளி பெறக்கூடியதாக ஒழுங்குகளைச் செய்துள்ளது.

இதனுல் இவ்வளவு காலமும் தங்கட்குத்தேவையான பிடவைகளை ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துவந்த இவ்வூர் மக்கள் இலகுவாகப்பிடவைகளைப் பெறக்கூடியதாக இருக்கும் என நம்பப்படுகிறது.

## 'பேரீச்சம்பழம் வேண்டும்'

கொழும்பு, செவ்.

முஸ்லிம்களின் நோன்பு மாதமாகிய றம்ழான்மாதம் டிசம்பர் 13-ல் ஆரம்பமாகும் தருணத்தில் போதியளவு பேரீச்சம் பழம் கிடைக்க வசதிகள் செய்யுமாறு முஸ்லிம்கள்வர்த்தகஅமைச்சிடம் கோரியுள்ளனர்.

ஒவ்வொரு முஸ்லிமும் தனது நோன்பு விரதத்தை முறிக்கும்பேரீச்சம்பழத்தை வியாபாரிகள் சிலர் தொகையாக வாங்கிவிட்டு, செயற்கையான தட்டுப்பாடை ஏற்படுத்துவது தமதுகடந்தகால அனுபவமாகுமென இவர்கள் தெரிவித்துள்ளனர்.

## வரி வசூலிப்பதில் தீவிரம்

சுழிபுரம், செவ்

சுழிபுரம்கிராமசபையினர் சோலைவரியை வசூலிப்பதில் மிகவும்தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஐந்து வருடமாக அறவிடப்படாமல் இருந்த பணத்தை எல்லாம்ஒன்ருக வசூலிப்பதில் கிராமசபை உத்தியோகத்தர்கள் அதிகமாகஈடுபட்டுள்ளனர். இம் மாதமுடிவுக்குள்சகல வேலைகளும் பூர்த்தியாகி விடும் என்றும் அனேகமாக அடுத்தமாதம் பணம் கட்டாதவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரார்த்தனை மண்டபம்

கொடிகாமம், செவ்.

[illegible] பிரார்த்தனை மண்டப திறப்புவிழா ஜனவரியில் நடைபெறும்.

# அனுமதியின்றி நகை அடைவு பிடித்தார்களாம்

## தாயும் மகளும் கைது

மாவிட்டபுரம், செவ்

காங்கேசன்துறை பொலிசாருக்குக் கிடைத்த ஒரு இரகசிய தகவலைத் தொடர்ந்து சப்இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையா தலைமையில்சென்றபொலிஸ் கோஷ்டியொன்று அச்சவேலிதெற்கிலுள்ள ஒருவீட்டைத் திடீரென முற்றுகையிட்டு பரிசோதனையிட்டபோது சுமார்25 ஆயிரத்துக்கும் அதிகமான தங்கநகைகளை கைப்பற்றினுர்கள்.

இதுசம்பந்தமாக அவ்வீட்டைச்சேர்ந்த தாயும்மகளும் பொலிஸ்பாதுகாப்பில்வைக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி தெற்கில் அனுமதியின்றி நகைகள் அடைவு பிடிக்கப்படுவதாககிடைத்த தகவலைத் தொடர்ந்துதான் மேற்படி வீடு பரிசோதனையிடப்பட்டது. அங்கு125க்கும் அதிகமானவர்களுக்கு சொந்தமான நகைகள் அடைவு வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப் பட்டது.

அவ் வீட்டிலிருந்தவர்களெனக்கூறப்படும் வள்ளிப்பிள்ளை அவரது மகள் தங்கலட்சுமி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து விசாரணை நடைபெற்றுவருகிறது.

# 'வியட்னும் மக்கள்போல் போராடவேண்டும்"

உடுவில், செவ்வாய்

பயங்கர ஆயுதங்கள், சுழல் துப்பாக்கிகள் போன்றவற்றைப் பிரயோகித்துக் கூட விழிப்புணர்ச்சி - விடுதலைமோகம் கொண்ட வியட்னும் மக்களை அடக்கி ஒடுக்க முற்பட்ட அமெரிக்க அரசாங்கம் தன் செயலில் வெற்றி கண்டதா? வீறுகொண்ட சமுதாயத்தின் முன் பயங்கரமான ஆயுதங்கள் கூட பயனற்றுப் போவது திண்ணம்'' என்று உடுவிலில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் தீண்டாமை ஒழிப்பு பிரசாரக் கூட்டத்தில் பேசிய யாழ். பிரதேச கம்யூனிஸ்ட்கட்சி அமைப்பாளர் திரு. வி. ஏ. கந்தசாமி கூறினுர். கூட்டத்திற்கு திரு. நா. சின்னத்தம்பி தலைமை வகித்தார்.

திரு. டானியல் பேசுகையில், 1956-ம் வருடம் இந்நாட்டில் சாதி ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்பும் கூட சாதிப் பெயரால் ஓர் இனத்தவர் தாக்கப்படுவது வேதனைக்குரியது என்றும் நாம் உரிமைகளைப் பெறவேண்டுமேயானுல் இன்றுள்ள சமுதாயத்தை முற்ருக மாற்றி அமைக்கவேண்டும் என்றும் கூறினுர்.

திரு. பொ. நாகலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

ஒவ்வோர் இன, சமூகங்கள் மட்டும் முன்னேறினுல் போதாது. நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் முன்னேறி சமத்துவம் பெறவேண்டும். இன்று சமூகப் போராட்டம் நடத்தி வரும் நீங்கள் கொண்ட லட்சியத்தைக் கைவிடாமல் போராட்டத்தில் சாதுரியத்தையும், உபாயத்தையும் கையாண்டு வெற்றி பெறவேண்டும். சிறுபான்மையின மக்கள் எங்கெங்கெல்லாம்ஒடுக்கப்பட்டு வாழ்கின்றனரோ அங்கங்கெல்லாம் இந்தப் போராட்டம்நடைபெற்றுஅவர்களும் உரிமை பெற்று வாழ வழி செய்யவேண்டும்''.

திவாளர்கள் ஆசிரியர் அல்வேஸ், செந்தில்வேல், ராஜகோபால் உட்பட வேறு பலரும் பேசினர்.

## 'உயர் படிப்புவரை கற்பியுங்கள்'

வவுனியா, செவ்.

''தமது பிள்ளைகளை மேல் வகுப்புவரை படிக்கவைப்பது சகலபெற்றோரின் முக்கிய கடமையாகும்.''

இவ்வாறு மூன்றுமுறிப்புப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் சங்கக்கூட்டத்தில் பாடசாலையின் தலைமை ஆசிரியர் திரு. இரத்தினசிங்கம் பேசும்போது கூறினுர். வேறுபலரும் உரை நிகழ்த்தினர்.

## பதவி உயர்வும் இடமாற்றமும்

இமையாணன், செவ்.

வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர் ஆஸ்பத்திரியின் பிரதம டாக்டராகவும், ஆஸ்பத்திரியின் பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றிய டாக்டர் எஸ். பாலகிருஷ்ணர் பிரசவப் பகுதி நிபுணர் பட்டியலில் சேர்க்கப்பட்டு அவருக்குப்பதவி உயர்வும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி ஆஸ்பத்திரியில் உதவி டாக்டராகக் கடமையாற்றிய டாக்டர் பி. இராசசிங்கம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு இருதய சிகிச்சை நிலைய உதவி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று மாற்றலாகிச்செல்லவிருக்கின்ருர்.

## பயிர்ச்செய்கை குழுக்கூட்டம்

வவுனியா, செவ்.

பூவரசங்குளம் பயிர்ச்செய்கை குழுக்கூட்டம் அண்மையில் சங்கத்தின் தலைவர் தலைமையில் நடைபெற்றபொழுது பூவரசங்குளம் விவசாயிகளின் விவசாயக் கஷ்டங்களும், விவசாயத்தில் எவ்வாறு முன்னேறலாம் என்பது பற்றியும் நீண்டநேரம் ஆலோசனை செய்யப்பட்டது.

இக்கூட்டத்திற்கு வவுனியா பெரும்பாக உத்தியோகத்தர், விவசாயப் போதனுசிரியர், உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் உட்படப்பல உத்தியோகத்தர்கள் சமூகமளித்திருந்தனர்.

## ஞாபகார்த்தக்கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

காலம் சென்ற திரு. கனகசபாபதியின் சேவைகளைப்பாராட்டு முகமாகவும் அவரை நினைவுகூருமுகமாகவும்இன்றுமாலை 3மணியளவில் அன்னர் முன்னின்றுநிறுவிய பாண்டவில் கிழக்கு அரசினர் இராமகிருஷ்ண வித்தியாலய மண்டபத்தில் ஞாபகார்த்தக் கூட்டம் நடைபெறும்.

கோண்டாவில் கிராமமுன்னேற்ற சங்கத்தலைவர் திரு. சி. இரத்தினசிங்கம் தலைமையில் நடை பெறவிருக்கும் இக் கூட்டத்தில் கொக்குவில் கிராமசங்கத்தலைவர் திரு. சி. அருணம்பலம் நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. எஸ். புள்ளைநாயகம் வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தனிசாசலம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்

# விமானப்படைக் கோஷ்டியின் அபார விளையாட்டு

## எதிர் கோஷ்டியில் தேவராசாவின் ஆட்டம் சிறப்பாகவிருந்தது

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை விமானப்படைக்கும் யாழ்ப்பாணம் சென். பற்றிசியஸ் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற விறுவிறுப்பான ஒரு உதைபந்தாட்டப் போட்டியில் கடைசி நேரத்தில் கடுமையாக மோதிய விமானப்படைக் கோஷ்டி அமோக வெற்றியீட்டியது.

### ஒருசம்பவம்

இடைவேளை வரைக்கும் போட்டி உச்சக்கட்டத்தில் இருந்தது.

மைதானம், திரளான ரசிகர் கூட்டங்களினால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது. இதனால் ரசிகர்கள் பலர் மரங்களிலும், மதில்களிலும் நிறைந்திருந்தனர். போட்டி உச்சக்கட்டத்தை அடைந்திருந்த பொழுது மைதானத்தின் அருகில் இருந்த வாகை மரத்தில் சுமார் 25 ரசிகர்களின் உணர்ச்சி வேகம் அளவு கடந்து மரக்கொப்பையும் பாதிக்கவே "படார்" என்று அப்பெரும் மரக்கிளை முறிந்து மைதானத்தில் விழுந்தது! அத்தனை ரசிகர்களும் இதில் அகப்பட்டுக் கொண்டபோதிலும் பொலிசாரும், விளையாட்டில் ஈடுபட்டிருந்த விமானப் படை வீரர்களும், மற்றும் ஏனையோரும் மின்னல் வேகத்தில் அவ்விடத்துக்கு விரைந்து வந்து பாதிக்கப்பட்டவர்களை வெளியேற்றினர். சுமார் 15 நிமிடங்களின் பின் மரக்கிளை அகற்றப்பட்டது. தெய்வாதீனமாக எவருக்கும் ஆபத்து ஏற்படவில்லை இச்சம்பவத்தினால் போட்டியும் தாமதிக்கப்பட்டது.

இடைவேளைக்குப் பின் போட்டி மீண்டும் விறுவிறுப்பாக ஆரம்பமானது. இரு கோஷ்டி வீரர்களும் சுறுசுறுப்புடன் ஆடினர். மழை காரணமாக எங்கும் ஒரே சேறுக் காணப்பட்டது. அத்தனை வீரர்களும் சேற்றைப் பூசிக் கொண்டுதான் விளையாடினர். நேரம் போகப் போக சென் பற்றீசியஸ் பின்னணி வீரர்களின் ஆட்டம் சோர்வு கண்டது. விமானப்படை வீரர்கள் தருணத்தைப் பயன்படுத்தி எதிர் கோஷ்டியை அவர்கள் பக்கம் அடைத்துக் கொண்டனர். அவர்களுடைய திறமையான 'பாசிங்' விளையாட்டினால் சென். பற்றீசியஸ் திண்டாடினர். அடுத்தடுத்து கோல்களை விளாசினர். விமானப்படை முன்னணி வீரர்கள் 7 நிமிடத்தில் 3 கோல்களை முதலில் வெளுத்து வாங்கினர். தாகிர் என்னும் மத்திய முன்னணி வீரர் கோல்கள் போடுவதில் ஒரு புலியாக இருந்தார். மொத்தம் 4 கோல்களை இவர் விளாசித் தள்ளி தமக்கு நிகர் தாமே என்பதை நிரூபித்தார். கடைசியாக ஆர். பேர்னாண்டோ என்னும் வீரரும் ஒரு கோல் போட்டார். சென். பற்றீசியஸ் ஒரு கோலும் போடவில்லை ஆயினும் ஆரம்பத்தில் விமானப்படை வீரர்களை நிலைதளர்த்தியது பாராட்டுக்குரியது. இடதுகரைவீரர் தேவராசா வெகு தூரத்தில் இருந்தே பல அதிர் அடிகளை கோலுக்குள் உதைத்தார். இந்த அடிகள் கோல் கம்பத்தை சடாட வைத்தது இவரது மின்னல் வெட்டுக்கள் பாராட்டத் தக்கதாகவும் ரசிக்கக் கூடியதாகவுமிருந்தன. இவருடன் கிறிஸ்தியன், அன்ரனி, வெற்றிவேலு, கிறேஷியன், இறவுதர், சந்தியாகோ, மரியநாயகம் ஆகிய வீரர்களின் விளையாட்டும் சோபித்தது.

எதிர் கோஷ்டியின் காப்டன் மகிந்தா அலுவிகாரையின் ஆட்டம் சிறப்பாகவிருந்தது. சிறந்த 'பாசிங்' செய்து அழகாக விளையாடினார். இப்போட்டி முடிவில் இலங்கை விமானப்படைக் கோஷ்டி 5—0 கோல்களால் சென். பற்றீசியஸ் கோஷ்டியை வெற்றியீட்டியது. சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தம் வகித்தார்.

---

### மாணவர்கள் கஷ்டம்

மன்னூர், செவ்.

லங்காலை அர்ச். அன்னம்மாள் ஆண்கள் பாடசாலையில் 500 க்கும் அதிக மாணவர்கள் படிக்கின்றனர். இவர்களுக்கென மலசல கூடமில்லாததால் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

### ஹாட்லி வெற்றி

யாழ்ப்பாணம், செவ்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற ஒருசிநேகபூர்வமான் உதைபந்தாட்டப் போட்டியில் ஹாட்லிக்கல்லூரி வெற்றியீட்டியது. ஆரம்பத்தில் இருந்துமுடிவுவரையும் ரசிப்பாகக் காணப்பட்ட இப்போட்டியை ரசிகர்கள் வெகுவாக ரசித்தனர். ஹாட்லி கல்லூரியின் பாசிங் விளையாட்டு ரசிக்கத்தக்கது சென். பற்றிக்ஸ் முன்னணி வீரர்கள் பல கோல்கள் போடும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டது குறிப்பிடத்தக்கது. கடைசி நேரத்தில் கடுமையாக மோதிய ஹாட்லிக்கோஷ்டி 5-2 கோல்களால் சென். பற்றிக்கோஷ்டியை வெற்றியீட்டியது. இப்போட்டி பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

---

### அபராதம்

மாவிட்டபுரம், செவ்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த நாகலிங்கம் அருளப்பு என்பவர் அனுமதியின்றி சட்ட விரோதமாக 15 றூத்தல் டைனமற் வைத்திருந்ததாக சங்கானைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரி குற்றவாளியென்று கூறவே நீதிபதி எதிரிக்கு இருநூறு ரூபாய் அபராதம் விதித்தார்.

### புதுக்குடியிருப்பு வெற்றி

முல்லைத்தீவு, திங்கள்.

முல்லை தீவுக் கோஷ்டியினருக்கும், புதுக்குடியிருப்புக் கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற சிநேகிதபூர்வமான கிரிக்கட் ஆட்டத்தில் புதுக் குடியிருப்புக் கோஷ்டி வெற்றி பெற்றது.

---

### நாடகப் போட்டி முடிவுகள்

அட்டன், செவ்.

அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி வகுப்புகளுக்கிடையே அண்மையில் நடைபெற்ற நாடகப் போட்டிகளுக்கு புசல்லாவ நிலைய உதவி அதிபர் திரு. அ. சபாபதிப்பிள்ளை தலைமைவகித்தார். பரிசுபெற்றவர்களுக்கு திரு. யே. யோயல் பரிசுகள் வழங்கினர்.

ஆண்களின் போட்டி: முதலாவது நாடகம்- 'மறுமலர்ச்சி'. இரண்டாவது நாடகம்- 'வஞ்சம் தீர்த்த வனிதை'. மூன்றாவது நாடகம்- 'பழிக்குப்பழி'.

பெண்களின்போட்டி: முதலாவது நாடகம்- 'சூழ்ச்சியின் திறன்'. இரண்டாவது நாடகம்- 'சூழ்ச்சி வலையில் மான்'.

ஆண்களின் சிறந்தடைரக்ஷன் — உதவி டைரக்ஷன்: ஆர். ஜனார்த்தனன், ஆர். பாலகிருஷ்ணன், பி. கமலசேகரன், எம். கணபதி, ரி. பெரியசாமி, பி. முத்தையா. பெண்களில் சிறந்த டைரக்ஷன்: எம் கே. தனலட்சுமி, கே. பௌசுலேனியா,

சிறந்த நடிகர்: கே. செல்வராஜ், சிறந்தநடிகை: எஸ். இந்திரா.


## வடமராட்சி மக்களுக்கோர் நற்செய்தி!

# C. W. E.

ஸ்தாபனத்தாரின் பிடவைகளை மொத்தமாக விநியோகம் செய்வதற்கு பிரதான விற்பனையாளராக நியமிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

வர்த்தக அன்பர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

★ ★ ★

தீபாவளி தேவைகளுக்கான
சகலவிதமான
C. W. E. பிடவைகளும் மற்றும் ஜவுளி வகைகளும் நிதானமான விலைகளில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

# யாழ்ப்பாணம் சிப்சைட்

(C. W. E. பிரதான மொத்த விநியோகஸ்தர்கள்)

பிரதான வீதி, பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியலில் ஈடுபட்ட 79 ஆசிரியர் வேலைநீக்கம்

கொழும்பு, செவ்.

1965ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டதற்காகக் குற்றஞ் சாட்டப்பட்ட ஆசிரியர்களில் 79 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகவும், 337 பேர் தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் கல்வியமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை இன்று ஜனப்பிரதிநிதிகள்சபையில் திரு. சப்வி குணவர்த்தனாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## வலைத் திருட்டு முயற்சி வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

ஆயிரம் ரூபா பெறுமதியான வலையைத்திருடமுயற்சித்ததாக நால்வரைப் பொலிஸார், யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. பி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

சாட்சியங்களைப் பதிவு செய்யவில்லையெனப் பொலிஸார் கூறியதைத் தொடர்ந்து குருநகரைச் சேர்ந்த நான்கு சந்தேக நபர்களான சூசைப்பிள்ளை, பெரியதம்பி, பீட்டர், ராஜேந்திரம் ஆகியோரை 22-ம் தேதி ஆஜராகும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

1-வது சந்தேக நபர் சார்பில் புறக்டர் ஏ. அன்ரனியும் மற்றும் 3 சந்தேக நபர்கள் சார்பில் புறக்டர் வி. நடராசாவும் ஆஜரானவர்.

## பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், புதன்

ஆயிரம் ரூபா பெறுமதியான வலையைத்திருடியதாகப் பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்பட்டவர் 200 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

குருநகரைச் சேர்ந்த ஜோசப் திருநாவுகம் என்பவர் 1000 ரூபா பெறுமதியான வலையைத் திருடியதாக யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. பி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் நேற்றுக்காலை ஆஜர்செய்யப்பட்டார்.

எதிரி சார்பில் புறக்டர் ஏ. அன்ரனி, புறக்டர் ஆர். வில்வநாதன் ஆகியோர் ஆஜரானார்கள். மாஜிஸ்திரேட் எதிரியை 200 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து இம்மாதம் 22-ம் தேதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

## துவேஷம் முளைங்களில்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருப்பது துரதிருஷ்டமாகும் என்று திரு. ராசமாணிக்கம் கூறினார்

தேர்தல் சட்டத்தை மாற்றி அமைப்பது சம்பந்தமாக ஆராய்வதற்கு தெரிக்குழு வொன்றை நியமிப்பதற்கான அரசாங்கத்தின் பிரேரணைமீது திரு. ராசமாணிக்கம் பேசினார்.

பாஷாபெரமுனையின் தலைவர் திரு. சோமவீரசந்திரசிறி பேசியபோது, அனுராதப்புரத்துக்கு கார்கள் மூலம் கலாசார பவனியொன்றுபோவதற்குபாஷா பெரமுனை ஒழுங்குசெய்திருந்தது. 31-ம் திகதி இந்த பவனிக்கு அனுமதியளிக்கப்பட்டது ஆனால் 1-ம் திகதி அது ஏன்ரத்து செய்யப்பட்டதுஎன்று பிரதம மந்திரியிடம் கேட்டார்.

பாஷாபெரமுனை பத்து ஆண்டுகளாக இருந்துவருவதாகவும் அதில் உள்நாட்டு அமைச்சர் தமக்கு கீழ் காரியதரிசியாக இருந்துள்ளார் என்றும், இந்த பெரமுனையுடன் இணைந்துதான் முன்னர் திரு. பிலிப் குணவர்த்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்டதாகவும் திரு. சந்திரசிறி கூறினார்.

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகா பதிலளிக்கையில் பாஷா பெரமுனையின் கலாசாரபவனி நல்லமுறையில் எவரும் தலையிடதபடி போய்ச் சேர்வதற்கு பாதுகாப்பு அளிப்பதற்கு எமக்கும் விருப்பம் தான் அதனால் தான் முதலில் அனுமதியும் கொடுக்கப்பட்டது ஆனால் எதிர்பாராத விதமாக 1-ம் திகதி வர்த்தக ஊழியரின் வேலைநிறுத்தம் ஆரம்பமாகிவிட்டது. ஆதல் பொலிசார் எல்லாரும் தலைநகருக்குவரவேண்டியேற்பட்டது. அதனால் அனுமதியை ரத்து செய்யவேண்டியும் ஏற்பட்டதுஎன்றார்.

பிரதிநிதிகள் சபை நாளை பத்துமணிக்கு மீண்டும் மேற்படி மசோதா குறித்த விவாதிக்கும்.

## பிரிவு கவுன்சில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் அனுமதி வழங்கியுள்ளனர்.

மனுதார் திரு. அல்பிரட் துரையப்பா சார்பில் திரு. சி. ஓ. கெல்லொக் கியூ.ஸி., திரு. மொன்றி சொலமன், திரு. ஹமானி ஹனிபா, திரு. மோதிலால்நேரு ஆகியோர் ஆஜரானார்கள். மந்திரிதிரு. எம். திருச்செல்வத்துக்காக திரு. ச. எம். என் கிரேஷியன் கியு. ஸி., திரு. ஆர். கே. ஹண்டு ஆகியோர் ஆஜரானார்கள். மாநகர சபைக் கமிஷனர் சார்பில் திரு. எச். டபிள்யு. ஜயவர்த்தனா ஆஜரானார்.

## உபசபாநாயகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னையில் தொடர்ந்திருப்பதால் அதுசரி, சபையின் கௌரதிப்பதுமிதமல்லஎன்று கூறி அதற்கு அனுமதியளிக்க மறுத்துவிட்டார். இதைத் தொடர்ந்து எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் சென்ற மாதம் 24ந் தேதி தொடக்கம் சபை நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்துவந்தனர்.

## 10-ம் திகதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பதாகவும் ஒருசில விஷயங்களில் மட்டுமே முடிவுகள் எடுக்கப்படவேண்டியிருப்பதாகவும் அறியப்படுகிறது.

இதற்கிடையில் தொழில் மந்திரி திரு. எம். எச். முகம்மது வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்துவிடுமென்பதில் நம்பிக்கை கொண்டுள்ளார். விரைவில் முடிவேற்பட்டு விடுமென்றும் கருத்து தெரிவித்தார்.

## அப்பீல் மனு நிராகரிக்கப்பட்டது

திருநெல்வேலி, செவ்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு, பி ஜே. ராஜரட்ணத்தால் 1965-ம் வருடம் நவம்பர் மாதம் 9-ம் திகதி அளிக்கப்பட்ட தீர்ப்பை ஆட்சேபித்து நல்லூரைச் சேர்ந்த எஸ், காராளசிங்கம் சுப்பிரிம் கோர்ட்டில் தாக்கல் செய்த அப்பீல் மனு நேற்று முன்தினம் நிராகரிக்கப்பட்டது

இவ்வழக்கில் நல்லூரைச் சேர்ந்த எஸ். காராளசிங்கம் அதே இடத்தைச் சேர்ந்த செல்லையா குகதாஸன் என்பவரை 1964-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 13-ம் திகதி கத்தியால் குத்திப் படுகாயம் விளைவித்ததாக யாழ்ப்பாணம் பொலிஸாரால்குற்றம்சாட்டப்பட்டிருந்தது. இதனை விசாரணை செய்த யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் எதிரிக்கு 4 மாதச் சிறைத்தண்டனையுடன் 250 ரூபா குற்றமும் செலுத்தும்படியும், குற்றம் செலுத்தத்தவறினால் மேலும் 2 மாத சிறைத்தண்டனையும் அனுபவிக்கும்படி தீர்ப்பளித்தார்.

சுப்பிரீம் கோர்ட்டில் எதிரிசார்பில் கொல்வின் ஆர். டி. சில்வா, மஹேரி டி சில்வா ஆகியோரும் அரசாங்க தரப்பில் வழக்கறிஞர் எப். ஸி. பெரேராவும் ஆஜராகியிருந்தார்கள்.

## பரிசளிப்பு விழா

திருநெல்வேலி, புதன்

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று நடைபெறவிருக்கிறது. இவ்வைபவத்துக்கு வடமாநிலக் கல்விபதிப்தி திரு. தணிகாசலம் பிரதம விருந்தினராகக் கலந்து பரிசில்களை வழங்குவார்.

## புதைபொருள்களை பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், புதன்

புதைபொருள்ஆராய்ச்சிக் கமிஷனர் திரு. கொடகம்பரா நேற்றுக்காலை கந்தரோடைக்குச் சென்று புதைபொருள் ஆராய்ச்சியின்போது கண்டெடுக்கப்பட்ட பொருட்களைப் பார்வையிட்டார்.

புதைபொருள் ஆராய்ச்சியின்போது கண்டெடுக்கப்பட்ட இரு பாதங்களையும் அவர் பார்வையிட்டார். திரு. கொடகும்பரா யாழ்ப்பாணம் தேசிய நூதனசாலைக்கும் நேற்றுக்காலை விஜயம் செய்து அங்குள்ள பொருட்களையும் பார்வையிட்டார். தேசிய நூதனசாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் கந்தரோடைப் பொருட்களையும் அவர் பார்வையிட்டார். இவர் நேற்றுப் பிற்பகல் கொழும்பு திரும்பினார்.

## இந்த வருடத்தில் 817 ட்ருக்டர்கள் வரும்

கொழும்பு. செவ்.

இந்த வருடத்தில் எல்லாமாக 817 ட்ருக்டர்கள் இறக்குமதியாகவிருக்கிறது.

## மரண அறிவித்தல்

கொட்டடியைச் சேர்ந்த வி. விஸ்வரத்தினம் ஆசிரியரின் புத்திரி விஜயமாலினி காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று (9-11-66) மாலை கொட்டடி புதுவீதியிலுள்ள 32ம் இலக்க இல்லத்திலிருந்து ஈமக்கிரிகைகளுக்காக கீரிமலை? மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 1160

## மூன்று பிரிவுகளிலும் மகாஜனு சாம்பியனாகியது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிக்கும் அளவெட்டி அருணோதயாக்கல்லூரிக்கும் இடையேநடைபெற்ற 2-ம் பிரிவு 3-ம் பிரிவுச்சாம்பியன் போட்டிகள் இரண்டிலும் மகாஜனா முறையே 5-0; 3-0 கோல்களால் அருணோதயாவை வெற்றியீட்டி சாம்பியனாகியது. நேற்றுநடைபெற்ற 1-ம் பிரிவு 'ஏ' டிவிஷனில் யாழ். இந்துக்கல்லூரியும், தெலிப்பழை யூனியன்கல்லூரியும் கடுமையாக மோதியபோது யூனியன் கோஷ்டி 4-1 கோல்களால் யாழ். இந்துவை வெற்றியீட்டி சாம்பியனானது. இவ்வருடப்போட்டியில் மொத்தம் 3 போட்டிகளில் தெல்லிப்பழை சாம்பியனாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## புதிய தலைவர் தெரிவு

கனகராயன்குளம், செவ்

பனங்காமம் கிராமசபையின் தலைவர்தெரிவு வவனியா வடகிழ் உதவி ஆணையாளர் திரு. கே. தல்லைநாதன் தலைமையில் நடைபெற்றது. திரு. சூரியர் தம்பையா ஏகமனதாக சபையின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அவரின்பெயரை திரு. கர்லையா கோவிந்தபிள்ளை பிரேரிக்க திரு. உ. குமாரசாமி ஆமோதித்தார்.

## மயிலவாகனம் நிரந்தரக்காரியதரிசி

கொழும்பு, செவ்.

அபிவிருத்திப்பகுதிடைரக்டர் திரு. வி. மயில்வாகனம் கைத்தொழில் கடற்றொழில் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## நீதியரசர் தம்பையாவுக்கு புதிய பதவி

கொழும்பு, செவ்

நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ.சி. நீதிபரிபாலன சேவைக் கமிஷனின் ஓர் அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார். இம் மாதம் 18-ம் திகதியிலிருந்து இவர் இப்பதவியை ஏற்பார்.

பிரதம நீதியரசர் திரு. எம். சி. சன்சோனி ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இப்பதவி காலியானது.

## நந்தா ராஜினமா

புதுடில்லி, நவ. 8

இந்திய உள்துறை மந்திரி திரு. குல்சாரிலால் நந்தா தம் மந்திரிபதவியை ராஜினமா செய்து விட்டார்.

நேற்று பார்லிமெண்ட் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் விஷயத்தில் திரு. நந்தா நடந்துகொண்டமுறைபற்றி காங்கிரஸ் கட்சி அங்கத்தவர்கள் தெரிவித்தகண்டனங்களைத் தொடர்ந்தே அவர் ராஜினாமா செய்துள்ளார். இந்த ஆர்ப்பாட்டங்களின்போது பலர் கொல்லப்பட்டனர். பசுவதையை எதிர்த்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## அனுமதியின்றி அடைவுபிடித்தவருக்கு ரூ. 75 அபராதம்

மானிப்பபுரம், செவ்.

அச்சுவேலி தெற்கில் அனுமதியின்றி நகைகள் அடைவுபிடித்ததாக காங்கேசன் துறைப்பொலிஸாரால்கைது செய்யப்பட்ட வள்ளிப்பிள்ளையும் அவரது மகளான தங்கலட்சுமியும் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. நீதசிங்கா முன்னிலையில் இன்று ஆஜர் செய்யப்பட்டபோது எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து முதல் எதிரியான வள்ளிப்பிள்ளைக்கு 75 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அவரது மகளான தங்கலட்சுமி விடுதலை செய்யப்பட்டார்,

இவர்கள் வைத்திருந்த நகைகள்பற்றி வருமானவரி இலாகாவுக்கு தெரியப்படுத்துவதாக கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது.

(முன்வந்த செய்தி 6-ம் பக்கத்தில் பார்க்க)

S. R. S.
ஜவுளி மாளிகையில்
தீபாவளி ஜவுளிகள்
★ விதம்விதமான சேலைகள்
★ வேட்டி - சால்வைகள்
★ சேட்வகைகள்
★ லங்கா கலர் டெர்லின்
★ லங்கா மில் பிடவைகள்
மற்றும்
லங்கா மணிப்புரி, டிஸ்யூ சேலைகளும்
எல்லாவகையான
கைத்தறி ஜவுளிகளும்
மலிவான விலைகளில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் வாங்கலாம்.
கைத்தறி ஜவுளிகள் உற்பத்தியாளர்
எஸ். ஆர். செல்லத்துரை
(C. W. E. அங்கீகாரம் பெற்ற ஜவுளி வர்த்தகர்)
216, கே. கே. எஸ். ரோட்; — யாழ்ப்பாணம்.
போன்: 296
ஸ்தாபிதம்: 1929 தந்தி: "ரோகிணி"

2x5

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட்டின் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலக்கோவில் மேலவீதி, 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org